# அருட்செய்தி

இது உயிருள்ள செய்தி உயிருட்டும் செய்தி

## பாகம் 3

இதைப் படியுங்கள் உங்களுக்கும் போதிக்க பிடிக்கும்
இதைப் பிடியுங்கள் உங்களுக்கும் சாதிக்க துடிக்கும்



அருட்கவி ஆயர் மு.அருள்தாஸ்

# அருட்செய்தி

இது உயிருள்ள செய்தி உயிரூட்டும் செய்தி

## பாகம் -3

இதைப் படியுங்கள் உங்களுக்கும் போதிக்க பிடிக்கும்
இதைப் பிடியுங்கள் உங்களுக்கும் சாதிக்க துடிக்கும்

ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்;
வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே;
அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்.
(மல்கியா 2:7)

தியானத்துடன்
**அருட்கவி ஆயர் மு. அருள்தாஸ்**

**Songster Rev. M. ARUL DOSS, M.A., B.D., M.Div., M.Th.,**
Church Pastor, Music Teacher & Rhymester
ECI - Kaveripakkam Area, Chennai Diocese.
Cell- 8098440373, 8344571502
Mail id- revmaruldoss@gmail.com

## என் இருதயத்தின் ஆழத்தி- ருந்து...

என்னை உண்டாக்கிய கர்த்தாவுக்கும்
என்னை கருவாக்கிய அப்பாவுக்கும்
என்னை உருவாக்கிய அம்மாவுக்கும்
என்னை போசித்த உறவுகளுக்கும்
என்னை நேசித்த துணைவிக்கும்
என்னை சுவாசித்த பிள்ளைகளுக்கும்
என்னை சிநேகித்த நண்பர்களுக்கும்
என்னை ஆதரித்த அன்பர்களுக்கும்
எனக்கு அறிவூட்டிய ஆசிரியர்களுக்கும்
எனக்கு வழிகாட்டிய ஆசாரியர்களுக்கும்

நன்றி சொல்- இச்செய்திகளைத் தங்கள் கனிவான பார்வைக்குப் பணிவாக சமர்ப்பிக்கிறேன்.

அன்புடன்

**அருட்கவி ஆயர் மு. அருள்தாஸ்**

பெற்றோர்: திருமிகு முனிசாமி அருள்துரை
திருமதி சுகுணாமேரி
மனைவி: திருமதி பூர்ணிமா **B.A., D.T.Ed.,**
பிள்ளைகள்: அருள்கிளாடி, அருள்கிரேஸி,
அருள்கிளாட்சன், அருள்குளோரி


முகவரி

எண் 206-1 அண்ணா வீதி, கடப்பேரி கிராமம்,
காவேரிப்பாக்கம் வழி, வாலாஜா தாலுக்கா,
வேலூர் மாவட்டம். அஞ்சல் எண்-632508
தொடர்புக்கு – 8098440373, 8344571502
மின்னஞ்சல் - revmaruldoss@gmail.com

The Most Rev. Dr. M. EZRA SARGUNAM, M.A., B.D., D.D,

ECI - Father Bishop

# அணிந்துரை

எங்கள் இசிஐ திருச்சபையின் **ஆயர்** அருட்கவிஞர் மு.அருள்தாஸ் அவர்கள் எழுதியுள்ள அருளுரை குறிப்புகள் அடங்கிய **அருட்செய்தி-3** என்ற நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்

நாற்பது ஆண்டுகளே நிரம்பிய ஆயர் தனக்குக் கொடுக்கப்பட்ட திருச்சபைப் பணிகளை சீறும் சிறப்புடன் செய்வது மட்டுமல்லாமல் இனிய தமிழில், கவிதைகள் புனைவதிலும் பாடல்கள் எழுதுவதிலும், தமிழில் மட்டுமல்லால் இந்தி மொழியிலும் ஆங்கில மொழியிலும் கவிதை எழுதும் அவரது திறமைகளைக்கண்டு வியப்புருகிறேன். இந்திய சுவிசேஷ திருச்சபைகளில் ஊழியம் செய்யும் ஆயர்கள், இந்தியா முழுவதிலும் உள்ள பல மாநிலங்களில் ஊழியம் செய்யும் வாய்ப்புகள் உள்ளபடியால் தமிழில் மட்டுமன்றி பிற மொழிகளிலும் அருளுரை ஆற்றும் வரங்களைப் பெற்றிருக்கின்றனர்.

எனவே அருட்கவிஞர் ஆயர் மு. அருள்தாஸ் அவர்கள் தனது நூ- ல் பிரசங்கக் குறிப்புகளையே தெள்ளிய தமிழில் எழுதியிருக்கும் விந்தை பாராட்டுக்குரியது. மேலும் கதைகள், கவிதைகள், நாடகங்கள், எழுதும் திறமையும் பாடல் வழியாய் இறைச்செய்தி அளிக்கும் வரத்தை இவருக்கு தேவன் தந்ததற்காக நன்றி செலுத்துகின்றேன். இவருடைய நூலை தியானத்திற்கும், அருளுரை ஆற்றவும், கவிதைகள் இயற்றுவ தற்கும் அருட்பணியாளர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தியானத்துடன் எழுதப்பட்டிருக்கும் இந்த அருட்செய்தி நூலை வாங்கி பயன்பெறும் அருளுரையாளர்கள் தங்களுடைய இறைச் செய்திகளிலும் இப்புதுமையைப் பயன்படுத்தி தமது விசுவாசிகளை வியக்கவைப்பர் என்று நினைக்கிறேன். இத்தகைய தேவகிருபை களைப்பெற்ற **அருட்கவிஞர் ஆயர் மு.அருள்தாஸ்** அவர்கள் இன்னும் பல நூல்களை எழுதி, தேவனுடைய திருப்பெயரை மகிமைப்படுத்த ஜெபித்து வாழ்த்துகிறேன், ஆசீர்வதிக்கிறேன்.

இறைப்பணியில்

தந்தை பேராயர் அறிவர் ம. எஸ்றா சற்குணம்

The Most Rev. Dr. D. SUNDER SINGH, M.A., B.D., M.Th., D.Min.,
ECI - President Bishop

# வாழ்த்துரை

அருட்செய்தி ஆசிரியர் அருட்கவி ஆயர் மு. அருள்தாஸ் அவர்களை இசிஐ ஊழியங்களிலே அவர் தன்னை இணைத்துக் கொண்ட காலமுதல் நன்கு அறிந்திருக்கிறேன். இவருடைய இறைப் பணியையும் இலக்கியப் பணிகளையும் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். இந்தியாவின் பல மாநிலங்களில் குறிப்பாக, அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் இவருடைய பணியை நேரில் கண்டு வியந்திருக் கிறேன். சுனாமி மற்றும் பூகம்பம் வந்த காலங்களிலே ஆண்டவருக் காகவும், நமது இசிஜ ஊழியங்களுக்காகவும் மிகவும் வைராக்கியமாய் ஊழியங்களை நிறைவேற்றியவர்.

இவர் கவிதை எழுதுவதிலும், பாடல் பாடுவதிலும், பஜனை பாடுவதிலும், பிரசங்கம் செய்வதிலும் விஷேசித்த வரம் பெற்றவர். தமிழ் மட்டுமல்லாது ஆங்கிலம், இந்தி, தெலுங்கு மொழிகளைக் கற்று, அருட்செய்தியை பிரசங்கிக்கக்கூடியவர்.

தற்போது இவர் எழுதியுள்ள அருட்செய்தி-3 என்ற நூலை காணும்போது உள்ளத்தில் பெருமகிழ்ச்சியடைகிறேன். வேதவசன ஆதாரங்களோடு மூன்றுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் எழுதப்பட்டி ருக்கும் இந்த அருட்செய்திகள் ஆயர்களுக்கும், ஊழியர்களுக்கும், சுவிசேஷகர்களுக்கும், விசுவாசிகளுக்கும் மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்புத்தகத்தை ஆழ்ந்த தியானத்திற்குப்பின் எழுதிய ஆயர் மு. அருள்தாஸ் அவர்கள் இன்னும் அநேக செய்திகள், பாடல்கள், கதைகள், கவிதைகள், அருட்குறள்கள் என தமிழிலும், பிற மொழிகளிலும் எழுத ஆண்டவர் அருள் பா- த்திடுவாராக.**“ஒரு லட்சம் திருச்சபைகள் ஒரு கோடி ஆத்துமாக்கள்”** என்கிற இசிஜ தரிசனப் பயணத்தில் இவர் கடைசிவரை தொடர்ந்து செயலாற்ற மனதார வாழ்த்துகிறேன்; உளமாற ஆசீர்வதிக்கிறேன்.

இறைப்பணியில்

பிரதம பேராயர் அறிவர் தே. சுந்தர்சிங்

The Rt. Rev. Dr. S. RAJA SINGH, M.A., B.D., D.Mim,
ECI – Bishop Chennai Diocese

# வாழ்த்துரை

அருட்கவி ஆயர் மு. அருள்தாஸ் அவர்கள் எழுதியுள்ள அருட்செய்தி-3 என்ற இந்நூலுக்கு வாழ்த்துரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**அருள்திரு மு. அருள்தாஸ்** அவர்கள் இந்திய சுவிசேஷ திருச்சபையின் பேரில் பற்றுக்கொண்டவர். மக்களோடு மக்களாக இருந்து அருட்பணி செய்பவர். பழகுவதற்கு எளிமையானவர். பேசுவதில் இனிமையானவர். கவிதை நயத்தோடு பிரசங்கிக்கக் கூடியவர். மற்றவர்களை மனதார பாரட்டும் குணமுடையவர். கிராம மக்களிடம் நற்செய்தி அறிவிப்பதில் கைதேர்ந்தவர்.

அவர் எழுதியுள்ள இந்நூல் போதகர்களுக்கும், சுவிசேஷகர் களுக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது. வேதாகமத்தை நன்கு வாசித்து, ஆழ்ந்த தியானத்துடனும், கவிதை நயத்தோடு கூடிய புதுமையான தலைப்புகளோடு அருட்செய்தி குறிப்புகளை இந்நூ- ல் அவர் படைத்துள்ளதை மனதார பாராட்டுகிறேன்.

பிரசங்கங்களை எழுத்துவடிவில் கொண்டு வருவதில் பல சிரமங்கள் உண்டு. ஆனால் **அருள்திரு மு. அருள்தாஸ்** அவர்கள் சீரிய சிந்தனையோடு இப்புத்தகத்தை எழுதியுள்ளார், இசிஐ சென்னை பேராயத்தில் உள்ள போதகர்கள் பலர் புத்தகங்கள் எழுதுவது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்நூலை போதகர்கள், சுவிசேஷகர்கள் படித்து பயனடை யும்படி விரும்புகிறேன். இந்நூலாசிரியர் தேவன் தனக்கு அளித்த கிருபையின்படி இன்னும் பல நூல்களை எழுதி பிரசங்கிமார்களுக்கு உதிவியாயிருக்கும்படி உள்ளத்தின் ஆழத்தி- ருந்து வாழ்த்துகிறேன்

இறைப்பணியில்

பேராயர் அறிவர் S. ராஜாசிங்

The Rt. Rev. Dr. A. MOHAN M.A., B.D., M.Th., D.D.,
ECI – Associate Bishop Chennai Diocese

# வாழ்த்துரை

அருட்கவி ஆயர் மு. அருள்தாஸ் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இவர் எழுதியுள்ள **அருட்செய்தி-3** என்ற இந்நூலுக்கு வாழ்த்துரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**ஆயர் மு.அருள்தாஸ்** அவர்கள் இசிஐ ஊழியங்களிலே பலஆண்டுகளாக அறிந்திருக்கிறேன். இசிஐ ஊழியங்களின்மேல் அவர்கொண்ட தாகத்தையும், உற்சாகத்தையும், கடவுள் அவரைப் பயன்படுத்துவதை காணும்போது கர்த்தரைத் துதிக்கிறேன்.

இப்பொழுதும் கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஆயர் மு.அருள்தாஸ் அவர்கள் வேத செய்திகள் அடங்கிய புத்தகத்தை எளியமுறையில் எல்லா ஊழியர்களும், விசுவாசிகளும் ஆசீர்வதிக் கப்பட தொகுத்து வெளியிட்டுள்ளார். பல வருட ஊழியங்களின் பலனாக இந்த புத்தகத்தின் செய்திகள் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

இசிஐ கடந்து மற்ற சபை மக்களும் நிச்சயமாக இதைப் பயன்படுத்தி ஆசீர்வதிக்கப்படுவார்கள். இதிலுள்ள அநேக பிரசங் கங்கள் சபைகளில், நற்செய்தி கூட்டங்களில், இல்லக் கூடுகைகளில் பிரசங்கிக்கும் பிரசங்கிப்பாளர்களுக்கு மிகவும் பேருதவியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்பெரும் முயற்சிகளை எடுத்து இப்புத்தகம் வெளிவர பிரயாசப்பட்ட அனைத்து கர்த்தருடைய பிள்ளைகளையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பாராட்டுகிறேன்.

இன்னும் பல புத்தகங்கள் ஆயர் மு.அருள்தாஸ் அவர்கள் வெளியிட அவருக்காக ஜெபிக்கிறேன். இசிஐ-யின் தரிசனம் இப்புத் தகத்தின் வாயிலாக மக்களுடைய உள்ளங்களில் பதிவேற்றிடவும் விசுவாசிகள் மத்தியில் எழுப்புதல் காணப்படவும் ஜெபிக்கிறேன், மனதார வாழ்த்துகிறேன்

இறைப்பணியில்

பேராயர் அறிவர் அ. மோகன்

**The Rev. Dr. J.A. DAVID ONESIMU Ph.D,**
Principal- Madras Theological Seminary & College

# வாழ்த்துரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! அருட்கவிஞர்ஆயர் மு.அருள்தாஸ் **அவர்கள்** எழுதிய அருட்செய்தி-3 என்ற இந்நூலுக்கு வாழ்த்துரை அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கர்த்தருடைய வேதம் அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நமக்கு நலமாயிருக்கிறது. கர்த்தருடைய வசனம் நம் கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது. (சங்கீதம் 119:72,105) எனவே, நல்லதோர் கிறிஸ்தவ வாழ்வானது வேதாகமத்தை வாசித்து தியானிப்பதாகும். இன்றைய நவீன உலகத்தில், **அருட்கவி ஆயர் மு.அருள்தாஸ்** அவர்கள் **அருட்செய்தி**-3 என்கிற தியான புத்தகத்தை வடிவமைத்து கொடுத்துள்ளார். ஒவ்வொரு கிறிஸ்தவர்களும், ஆயர்களும், பயிற்சிபோதகர்களும், விசுவாசிகளும் இந்த அருட்செய்தியை வாசித்து பயன்பெறுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பொன்மொழிகள் அடங்கிய செய்திகளை மிக அழகாக, கவிதை நடையில், எளிய முறையில் ஐந்து முதல் பத்து நிமிடங்களில் வாசித்து வேதஅறிவையும், ஆவிக்குரிய முன்னேற்றத்தையும் பெற்றுக்கொள்ள நிச்சயமாக இக்கையேடு உதவிகரமாக இருக்கும்.

எனவே ஆண்டவர் திருப்பணியை எழுதுவதிலும், போதிப்பதிலும், பாடுவதிலும், கவிதைகள் படைப்பதிலும், நாடகங்கள் மற்றும் கதைகள் கட்டுரைகள் வாயிலாக எடுத்துரைப்பது மிகவும் சிறப்புக்குரியது. ஆகவே போதகர் அவர்களை மனமுவந்து பாராட்டுகிறேன். அன்புள்ள நண்பர் அருட்கவிஞர் ஆயர் மு. அருள்தாஸ் அவர்களின் கிறிஸ்தவ இலக்கியப்பணி அகில உலக அளவில் தமிழ்வாழ் மக்களிடம் சென்றடைய வாழ்த்துகிறேன்.

கர்த்தர் தாமே இவ்வூழியங்களை ஆசீர்வதிப்பாராக.

இறைப்பணியில்

**அருள்திரு. அறிவர் J.A. டேவிட் ஒநேசிமு**

# முன்னுரை

அசனம் என்பது உடலுக்கு செழிப்பூட்டும்-தேவ
வசனம் என்பது உள்ளத்துக்கு விழிப்பூட்டும்
அசந்து போகாதே பாவ விசனம் பழிசூட்டும்
வசந்தம் தேடிவா தேவ வசனம் வழிகாட்டும்

**தேனிசைத் தென்றலாய் அன்பை நாளும் வீசி, தித்திக்கும் செந்தமிழால் இன்பமாய் பேசி,** எத்திசைக்கும் தொனிக்கும் இறை வார்த்தைகளை என் சிந்தையில் தோன்ற செய்த கர்த்தாதி கர்த்தாவின் பாதத்தில் இப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கிறேன். **என்னத்தை** எழுதுவது என்று என் **எண்ணத்தைக்** கசக்கியபோது உருவான **வண்ணத்தை** புத்தக **கிண்ணத்தைப்** பயன்படுத்தி பக்கத்துக்குப் பக்கம் அருட்செய்திகளை வரைந்திருக்கிறேன்.

தந்தை தாய் வழியாக இத்தரையில் என்னைப் பிறக்கச் செய்து, எழுதும் விரலும், பாடும் குரலும் தந்து. இதுவரை என்னை பத்திரமாய் பாதுகாத்து, பராமரித்து, பயன்படுத்துகிற கர்த்தாவுக்கு முதற்கண் வணக்கம். என்னை ஈன்றெடுத்து, கடவுளின் உன்னத அருட்பணிக்கு அர்ப்பணித்த என் பெற்றோ ருக்கும் உடன் பிறந்தவர்களுக்கும் சிரம் தாழ்ந்த வணக்கம்.

அன்பானவர்களே! அருட்செய்தி-3 ஆம் பாகத்தின் வாயிலாக தங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். சிறுபிராய முதற்கொண்டு கடவுளைப் புகழ்ந்து போற்றுவதும் மகிழ்ந்து சாற்றுவதும், கவிதைகள் புனைவதும், காவியங்கள் வனைவதும், கானம் பாடுவதும், தானம் கொடுப்பதும் என்னுடைய பழக்கமும் வழக்கமு மாய் இருந்து கொண்டிருக்கிறது.

பல மேடைகளில் கிராமிய நாடகங்கள், தெருக்கூத்து நடித்த அனுபவங்கள் உண்டு. ஆடு மாடுகளின் பின்னே அலைந்த என்னை கடவுள் தமது உன்னத பணிக்கு அழைத்து திருச்சபை மக்களை வழிநடத்தும் ஆயராக என்னை உருவாக்கினார். அதற்கு காலமெல்லாம் அவரின் காலடியில் கிடப்பதை தவிர வேறொன்றும் எனக்கு விருப்பமில்லை.

அவர் தந்த தாலந்துகளை அவருக்கே பயன்படுத்தவேண்டும் என்ற தலையாய கடமையைச் செய்ய, ஆயிரக்கணக்கான மணித் துளிகள் செலவிட்டேன், கனம்பொருந்திய பேராயர்கள், ஆயிரக்கணக் கான ஆயர்களின் உந்துத- ன் பேரில் உருவான செய்தியே இந்த அருட்செய்தி-3 இது அடியேனின் சின்ன அறிவுக்கு எட்டிய வேத தியானத்தை இந்த புத்தகத்தில் அச்சிட்டிருக்கிறேன்.

மூன்று, நான்கு, அதற்கும் மேற்பட்ட தலைப்புகளில் செய்திகளை அமைத்துள்ளேன். அடியேனுடைய 22 ஆண்டுகால ஊழியத்தின் பலனாக அநேக புத்தகங்களை எழுதியுள்ளேன். ஆனால் இந்த அருட்செய்திகளை எழுதுகிறபொழுது இருக்கின்ற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

மேலும், இதை தியானிக்கிற அன்பு நெஞ்சங்களுக்கு தாங்களும் இதுபோல எழுதி வைத்திருப்பீர்கள். அவைகளை தேடி எடுத்து ஒன்று சேர்த்துவையுங்கள். கடவுள் உங்களைப் பயன்படுத்தும் காலம் வரும் போது தயவுசெய்து அவைகளைப் புத்தகமாக்குங்கள். வாயின் வழியாக சொல்லும் வார்த்தைகள் மறந்துபோகலாம். ஆனால் புத்தக வடிவில் அச்சடிக்கும்போது அது உங்கள் சந்ததி சந்ததியாக பார்க்க முடியும். அதின் மூலம் அவர்களுக்கும் சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். மறந்துவிடாதீர், மறந்து இருந்துவிடாதீர் இன்றே ஆரம்பியுங்கள், கர்த்தர் நம்மோடிருக்கிறார். எல்லா துதியும் கனமும் மகிமையும் கர்த்தருக்கே உண்டாவதாக.

இதுபோன்ற செய்திகளை அனுதினமும் வாட்சப்பில் பெற இந்த எண்ணுக்கு 8098440373 தொடர்புகொள்ளுங்கள். தங்களுக்கு அதை அனுதினமும் அருட்செய்தி என்ற தலைப்பில் அனுப்பி வைக்கப்படும்

மிக்க நன்றி

கிறிஸ்துவின் வழியில்
தங்களின் விழியில்

அருட்கவி ஆயர் மு.அருள்தாஸ்

செய்தி தலைப்புகள் பக்கம்

-----------------------------------------


| | |
|---|---|
| 1. அசதியாயிராதேயுங்கள் | 21 |
| 2. அண்டிகொள்ளுங்கள் | 19 |
| 3. அநாதி தேவனே அடைக்கலம் | 14 |
| 4. ஆலயம் ஒன்றே போதும் | 29 |
| 5. ஆழம் சொல்லும் செய்தி | 47 |
| 6. இரட்சிப்பு அளிக்கும் கர்த்தர் | 54 |
| 7. இரட்டிப்பாய் தரும் இறைவன் | 24 |
| 8. இருதயத்தைப் பார்க்கும் இறைவன் | 40 |
| 9. இருந்தாலும் இல்லாவிட்டாலும் | 50 |
| 10. உண்மை தரும் நன்மை | 39 |
| 11. உதவி செய்யும் கர்த்தர் | 33 |
| 12. உற்சாகமாயிருங்கள் | 28 |
| 13. உள்ளதைக் கொடுத்த உள்ளங்கள் | 49 |
| 14. கர்த்தர் இன்றி எதுவுமில்லை | 55 |
| 15. கர்த்தர் உங்களை நடத்துவார் | 18 |
| 16. கர்த்தர் எங்கும் இருக்கிறார் | 15 |
| 17. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார் | 41 |
| 18. கர்த்தர் பெரியவர் | 34 |
| 19. கர்த்தரால் வரும் பலன்கள் | 52 |
| 20. கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள் | 12 |
| 21. கர்த்தருக்குக் காத்திருங்கள் | 26 |
| 22. கர்த்தருடைய கண்கள் உறங்குவதில்லை | 59 |
| 23. கர்த்தருடைய கரங்கள் குறுகுவதில்லை | 57 |
| 24. கர்த்தருடைய செவிகள் மந்தமாவதில்லை | 58 |
| 25. கர்த்தருடைய வார்த்தைகள் ஒழிவதில்லை | 56 |
| 26. கர்த்தரையே சேவியுங்கள் | 14 |

| செய்தி தலைப்புகள் | பக்கம் |
|---|---|


27. குறைவை நிறைவாக்குபவர் 31
28. கிரீடம் சூட்டும் கர்த்தர் 27
29. சகாயம் செய்யும் கர்த்தர் 44
30. சித்தத்தைச் செய்யும் கர்த்தர் 32
31. சித்தம் இருந்தால் சுத்தம் 61
32. சேர்த்துக்கொள்ளும் கர்த்தர் 16
33. சுபாவம் மாற்றும் பாவம் 60
34. ஞானத்தைத் தரும் கர்த்தர் 17
35. திறக்கும் கர்த்தர் 43
36. தீமையை நன்மையினாலே வெல்லுங்கள் 42
37. தேவனுக்குப் பயந்திருங்கள் 30
38. நம்மை ஆதரிக்கும் ஆண்டவர் 38
39. நம்மைக் காப்பாற்றும் கர்த்தர் 35
40. நீங்கள் ஆயத்தமாயிருங்கள் 36
41. பலப்படுத்தும் கர்த்தர் 37
42. மரிக்கும் வரை மறக்காதே 51
43. மனதுருகும் தெய்வம் 25
44. மனப்பூர்வமாய் செய்யுங்கள் 53
45. முடிவு தரும் விடிவு 63
46. முன்னுமில்லை இதற்கு பின்னுமில்லை 62
47. விடுதலை நாயகன் 17
48. வாழவே நீ பிறந்தாய் 48
49. வாழ்வு தரும் வசனம் 25
50. விழுந்தாலும் எழுந்திருந்திருங்கள் 46
51. ஜாக்கிரதையாயிருங்கள் 20
52. ஜெயிக்கவே நீ பிறந்தாய் 45

# 1. கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்

ரோமர் 12:11 (1-11) அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்

யோவான் 12:26 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.

எபிரெயர் 5:4; ரோமர் 14:18; மத்தேயு 6:24; மத்தேயு 20:28

## 1. தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்

எபேசியர் 6:6 (6-8) மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்பு கிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.

மத்தேயு 25:14-30 (தாலந்து) அப்போஸ்தலர் 20:24 (பவுல்)

## 2. கபடமில்லாத இருதயத்தோடே செய்யுங்கள்

கொலோசெயர் 3:22 வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்படிந்து, நீங்கள் மனுஷனுக்குப் பிரியமாயிருக்க விரும்பு கிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் தேவனுக்கு பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத் தோடே ஊழியஞ்செய்யுங்கள்.

2தீமோத்தேயு 2:15; 2:24; 4:5 நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு

## 3. அன்பினாலே ஒருவருக்கொருவர் செய்யுங்கள்

கலாத்தியர் 5:13 சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக் கப்பட்டீர்கள், இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அனுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்.

1யோவான் 4:10-21

# 2. அநாதி தேவனே அடைக்கலம்

உபாகமம் 33:27 (26-39) அநாதி தேவன் உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்

சங்கீதம் 46:7,11 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.

சங்கீதம் 90:1 தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்.

சங்கீதம் 94:22 கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் கன்மலையுமாயிருக்கிறார்.

சங்கீதம் 18:2; சங்கீதம் 59:9,16,17; சங்கீதம் 62:2,6; சங்கீதம் 144:2

## 1. சிறுமைப்பட்டவனுக்கு அடைக்கலம்

சங்கீதம் 9:9 சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்.

சங்கீதம் 69:29 நானோ சிறுமையும் துயரமுமுள்ளவன்; தேவனே, உம்முடைய இரட்சிப்பு எனக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக

சங்கீதம் 14:6 சிறுமைபட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமாயி ருக்கிறார் என்பதால்... அலட்சியம்பண்ணினீர்கள்.

## 2. எளியவனுக்கு அடைக்கலம்

ஏசாயா 25:4 நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளிய வனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்கு தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்.

சங்கீதம் 107:41 எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப் போலாக்குகிறார்.

சங்கீதம் 72:12,13; யோபு 5:15; சங்கீதம் 113:7;எரேமியா 20:13

## 3. அபிஷேகம்பண்ணினவனுக்கு அடைக்கலம்

சங்கீதம் 28:8 கர்த்தர் அவர்களுடைய பெலன்; அவரே தாம் அபிஷேகம்பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்.

1சாமுவேல் 26:23 கர்த்தர் அபிஷேகம்பண்ணினவர்மேல், என் கையை நீட்ட மனதில்லாதிருந்தேன். (தாவீது- சவுல்)

# 3. கர்த்தரையே சேவியுங்கள்

யோசுவா 24:15 கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய் கண்டால், பின்னை யாரைச் சேவீப்பீர்கள்... நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்
யாத்திராகமம் 23:25 உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்.
2நாளாகமம் 34:33 (யோசியா); ரோமர் 1:9 (பவுல்)
சங்கீதம் 2;11 பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள்.

## 1. முழுமையாய்ச் சேவியுங்கள்

1சாமுவேல் 12:20 சாமுவேல் ஜனங்களை நோக்கி: பயப்படாதேயுங்கள்; கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் கர்த்தரை உங்கள் முழு இருதயத்தோடும் சேவியுங்கள்
உபாகமம் 10:12(12-20) இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து... உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து...
உபாகமம் 11:13(11-16)

## 2. உண்மையாய்ச் சேவியுங்கள்

யோசுவா 24:14 ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமும் உண்மையுமாய்ச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள்.
1சாமுவேல் 12:24 நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து, உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக் கடவீர்கள்.

## 3. உற்சாகமாய்ச் சேவியுங்கள்

1நாளாகமம் 28:9 (தாவீது-சாலொமோன்) உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களை எல்லாம் அறிகிறார்.

# 4. கர்த்தர் எங்கும் இருக்கிறார்

யோசுவா 1:9(1-9) பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்

## 1. கர்த்தர் அருகில் இருக்கிறார்

சங்கீதம் 145:18 உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

ஏசாயா 55:6 கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கிறார்.

சங்கீதம் 34:18 நொறுங்குண்டவர்களுக்கு கர்த்தர் சமீபமாயிருந்து...

சங்கீதம் 119:151; சங்கீதம் 124:1,2; ஏசாயா 50:8; பி- ப்பியர் 4:5

## 2. கர்த்தர் நடுவில் இருக்கிறார்

மத்தேயு 18:20 இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். செப்பனியா 3:15,17; சகரியா 2:5,10,11; சங்கீதம் 46:5; யோவேல் 2:27; யோசுவா 3:5

## 3. கர்த்தர் முன்னே இருக்கிறார்

உபாகமம் 31:8 கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார். யாத்திராகமம் 33:14,19; ஏசாயா 45:2; மீகா 2:13; யோவான் 10:4; சங்கீதம் 16:11

## 4. கர்த்தர் பின்னே இருக்கிறார்

யாத்திராகமம் 14:19-21 இஸ்ரவே- ன் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார். ஏசாயா 58:7,8; சங்கீதம் 91:11,12; நீதிமொழிகள் 3:4,5; சங்கீதம் 121:8

## 5. கர்த்தர் உள்ளே இருக்கிறார்

உபாகமம் 7:21 பயப்படவேண்டாம்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார். 1யோவான் 4:4; யோவான் 14:17; மத்தேயு 10:20; 2கொரிந்தியர் 13:5

# 5. சேர்த்துக்கொள்ளும் கர்த்தர்

ஏசாயா 54:7 இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன்.
சங்கீதம் 27:10 தகப்பனும் தாயும் கைவிட்டாலும் சேர்த்துக்...
யோவான் 14:3 அவரோடு சேர்த்துக்கொள்வார்.
லூக்கா 15:11-32 கெட்டக் குமாரனைப்போல சேர்த்துக்கொள்வார்
லூக்கா 13:34 கோழி தன் குஞ்சுகளைப்போல சேர்த்துக்...

## 1. சிதறிகிடக்கிறவரைச் சேர்த்துக்கொள்பவர்

உபாகமம் 30:3 உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்வார்.
எசேக்கியேல் 20:41 நீங்கள் சிதறுண்டிருக்கிற தேசங்களி- ருந்து உங்களைச் சேர்த்துக்கொள்ளும்போது... பிரியமாயிருப்பேன்.
எரேமியா 31:10 இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக் கொண்டு ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக

## 2. தள்ளுண்டவரைச் சேர்த்துக்கொள்பவர்

செப்பனியா 3:19,20 இதோ, அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்; நொண்டியான வனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்த்துக்கொள்வேன்.
ஆகாய் 2:23 செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன்.

## 3. இரட்சிக்கப்படுகிறவரைச் சேர்த்துக்கொள்பவர்

அப்போஸ்தலர் 2:47 (14-47) தேவனைத் துதித்து, ஜனங்க ளெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிற வர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.
ரோமர் 14:1 விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்...
3யோவான் 1:8 சேர்த்துக்கொள்ளக் கடனாளியாயிருக்கிறோம்

# 6. ஞானத்தைத் தரும் கர்த்தர்

நீதிமொழிகள் 2:6 கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்
பிரசங்கி 1:17 அவர் நல்லவனுக்குத் தருகிறார்
நீதிமொழிகள் 2:7 நீதிமானுக்குத் தருகிறார்
சங்கீதம் 111:10; நீதிமொழிகள் 1:7; 9:10; 15:33 கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் தருகிறார்.
யாக்கோபு 1:5 ஞானத்தில் குறைவுள்ளவனுக்குத் தருகிறார்
தானியேல் 2:21 ஞானிகளுக்கு ஞானத்தைத் தருகிறார்.

## 1. யோசேப்புக்குத் தந்தார்

ஆதியாகமம் 41:39 (38-46) பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவை எல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக் கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுள்ளவன் வேறொருவனும் இல்லை.
அப்போஸ்தலர் 7:10 பார்வோன் சமுகத்திலே யோசேப்புக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்.

## 2. பெசலெயேலுக்குத் தந்தார்

யாத்திராகமம் 31:5 (1-5) சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவஆவியினால் நிரப்பி...
யாத்திராகமம் 35:30-33 ஞானத்தையும் புத்தியையும் அருளி, அவன் சகலவித வேலைகளை செய்யும்படி தேவஆவியினால் அவனை நிரப்பினார்.

## 3. சாலொமோனுக்குத் தந்தார்

1இராஜாக்கள் 4:29,30 தேவன் மிகுதியான ஞானத்தையும் புத்தியை யும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார்.
1இராஜாக்கள் 5:12 கர்த்தர் சொல்- யிருந்தபடியே சாலொமோனுக்கு ஞானத்தைத் தந்தருளினார்
1இராஜாக்கள் 3:5-15 ஞானமுள்ள இருதயத்தைத் தந்தார்.

# 7. கர்த்தர் உங்களை நடத்துவார்

ஏசாயா 58:11(1-11) கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்...

சங்கீதம் 48:14 மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

பி- ப்பியர் 1:5,6 கிறிஸ்துவின் நாள்பரியந்தம் நடத்துவார்.

ஏசாயா 49:10; 48:17; 40:11; எரேமியா 31:9; வெளிப். 7:17

## 1. சத்திய வழியில் நடத்துவார்

சங்கீதம் 25:5 (1-12) உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்.

யோவான் 16:13; சங்கீதம் 86:11; சங்கீதம் 107; சங்கீதம் 143:10

## 2. நித்திய வழியில் நடத்துவார்

சங்கீதம் 139:24 வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்

## 3. நீதியின் வழியில் நடத்துவார்

சங்கீதம் 23:3 அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதையில் நடத்துகிறார்

சங்கீதம் 5:8 என்னை உம்முடைய நீதியிலே நடத்தி எனக்கு முன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும்.

## 4. செம்மையான வழியில் நடத்துவார்

சங்கீதம் 143:10 உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக

சங்கீதம் 107:6,7 தாபரிக்கும் ஊருக்குப்போய்ச்சேர, அவர்களை செவ்வையான வழியிலே நடத்தினார்

## 5. சமாதான வழியில் நடத்துவார்

லூக்கா 1:79 நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்தி- ருந்து...

# 8. அண்டிகொள்ளுங்கள்

சங்கீதம் 57:1 (1-11) எனக்கும் இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும்; உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது; விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின் நிழ- லே வந்து அடைவேன்.

## 1. அண்டிக்கொண்டிருப்பதே நலமானது

சங்கீதம் 73:27,28 (23-28) உம்மைவிட்டுத் தூரமாய்ப் போகிற வர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச் சோரம் போகிற அனைவரையும் சங்கரிப்பீர்; எனக்கோ, தேவனை அண்டிக் கொண்டிருப்பதே நலம்... கர்த்தராகிய ஆண்டவர் மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.

## 2. அண்டிக்கொள்கிறவர்கள் பாக்கியவான்கள்

சங்கீதம் 2:12 (1-12) குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு,அவரை முத்தஞ்செய் யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரி யும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்

## 3. அண்டிக்கொள்கிறவர்களுக்கு கேடகமானவர்

நீதிமொழிகள் 30:5 (5-9) தேவனுடைய வசனமெல்லாம் புட மிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்

## 4. அண்டிக்கொண்டிருந்த ஜனங்கள்

லூக்கா 19:47,48 (45-48) பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும் அவரைக் கொலைசெய்ய வகைதேடியும், ஜனங்களெல்லாரும் அவருக்குச் செவிகொடுத்து அவரை அண்டிக்கொண்டிருந்தபடியால், அதை இன்னபடி செய்யாலா மென்று வகைகாணாதிருந்தார்கள்.

# 9. ஜாக்கிரதையாயிருங்கள்

ரோமர் 12:11 அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.

## 1. அழைப்பை உறுதியாக்குவதில்

2பேதுரு 1:10 ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். 1கொரிந்தியர் 1:26

## 2. உத்தமனாக நிறுத்துவதில்

2தீமோத்தேயு 2:15 நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. 2கொரிந்தியர் 10:18; யாக்கோபு 1:12

## 3. ஒருமையைக் காப்பதில்

எபேசியர் 4:3 சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.
யோவான் 17:3

## 4. நற்கிரியைச் செய்வதில்

தீத்து 3:8 நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். தீத்து 2:14; ரோமர் 2:7; 2கொரிந்தியர் 9:8; எபேசியர்2:10; பி- ப்பியர்1:5; 2தெசலோனிக்கேயர் 2:17

## 5. உபதேசம் செய்வதில்

1தீமோத்தேயு 4:13 நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு
2தீமோத்தேயு 4:2

## 6. ஜெபம்பண்ணுவதில்

1பேதுரு 4:7 எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். அப்போஸ்தலர் 6:4

# 10. அசதியாயிராதேயுங்கள்

2நாளாகமம் 29:11 (எசேக்கியா) என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கவும், அவருக்கு ஊழியஞ் செய்கிறவர்களும் தூபங்காட்டுகிறவர்களுமாயிருக்கவும் உங்களை அவர் தெரிந்துகொண்டார் என்றார்.

## 1. அளிக்கப்பட்ட ஊழியத்தில்

ரோமர் 12:11 அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.

எரேமியா 48:10 கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.

நீதிமொழிகள் 18:9 அசதியாயிருப்பவன் அழிம்பனுக்குச் சகோதரன்

நீதிமொழிகள் 19:15 அசதியானவன் பட்டினியாயிருப்பான்.

## 2. அளிக்கப்பட்ட வரத்தில்

1தீமோத்தேயு 4:14 (12-16) மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே.

2தீமோத்தேயு 1:6 நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி...

1கொரிந்தியர் 1:7,8; 1பேதுரு 4:10

## 3. அளிக்கப்பட்ட தேசத்தில்

யோசுவா 18:3 யோசுவா இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளபோகிறதற்கு, நீங்கள் எந்த மட்டும் அசதியாயிருப்பீர்கள்.

சங்கீதம் 37:9 கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் சுதந்தரிப்பார்கள்

சங்கீதம் 37:11 சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்

சங்கீதம் 37:22 ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரிப்...

சங்கீதம் 37:29 நீதிமான்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.

சங்கீதம் 37:34 காத்திருக்கிறவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்

# 11. விடுதலை நாயகன்

யோவான் 8:36 (32-36) குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.

2கொரிந்தியர் 3:17 கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு

### 1. பாவத்தி ருந்து விடுதலை

ரோமர் 6:22 (17-23) நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக் கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்த...

### 2. பலவீனத்தி ருந்து விடுதலை

லூக்கா 13:12 (11-13) 18 வருடமாய் நிமிரமுடியாத கூனியைப் பார்த்து: உன் பலவீனத்தி- ருந்து விடுதலையாக்கப்பட்டாய்.

### 3. அடிமையி ருந்து விடுதலை

யாத்திராகமம் 3:8 (1-10) அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும்... பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில்...

### 4. அக்கினியி ருந்து விடுதலை

தானியேல் 3:25 (1-30) இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்...

### 5. அதிகாரத்தி ருந்து விடுதலை

கொலோசெயர் 1:13 (12-15) இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய...

### 6. கட்டுகளி ருந்து விடுதலை

சங்கீதம் 146:7 (7-10) அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ் செய்கிறார்... கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்.

### 7. கடனி ருந்து விடுதலை

மத்தேயு 18:27 (23-27) அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி... கடனையும் மன்னித்துவிட்டான்.

### 8. சத்துருவிடமிருந்து விடுதலை

சங்கீதம் 136:24 சத்துருக்களின் கையி- ருந்து நம்மை விடுதலைப் பண்ணினவரைத் துதியுங்கள். சங்கீதம் 18:17,48; 106:10

### 9. சிறையி ருந்து விடுதலை

ஏசாயா 61:1 (1-3) கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்... சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை

லூக்கா 4:18; ஏசாயா 51:14

# 12. வாழ்வு தரும் வசனம்

யோவான் 6:68 (59-69) பேதுரு: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.

## 1. கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது

நீதிமொழிகள் 30:5-6 தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப் பட்டவைகள். சங்கீதம் 18:30; 2சாமுவேல் 22:31

## 2. கர்த்தருடைய வசனம் சத்தியமானது

சங்கீதம் 119:160 உம்முடைய வசனம் சமூலமும் (சகலமும்) சத்தியம் யோவான் 17:17; சங்கீதம் 33:4; வெளிப். 21:5

## 3. கர்த்தருடைய வசனம் ஜீவனுள்ளது

யோவான் 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

எபிரெயர் 4:12; யாக்கோபு 1:21

## 4. கர்த்தருடைய வசனம் இனிமையானது

சங்கீதம் 119:103 உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுர மாயிருக்கும் சங்கீதம் 19:10

## 5. கர்த்தருடைய வசனம் களங்கமில்லாதது

1பேதுரு 2:3 (1-3) நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பா- ன்மேல் வாஞ்சையாயிருங்கள்.

## 6. கர்த்தருடைய வசனம் வெளிச்சமானது

சங்கீதம் 119:105 உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது.

## 7. கர்த்தருடைய வசனம் நிலைத்திருக்கிறது

1பேதுரு 1:25 (23-25) கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் சங்கீதம் 119:89; ஏசாயா 40:8

# 13. இரட்டிப்பாய் தரும் இறைவன்

யோபு 42:10,12 யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார். கர்த்தர் யோபின் முன்னிலைமையைப்பார்க்கிலும் அவன் பின்னிலை மையை ஆசீர்வதித்தார்.

## 1. இரட்டிப்பான வரம்

2இராஜாக்கள் 2:9 (1-14) எ- யா எ- சாவை நோக்கி: நான் உன்னை விட்டு எடுத்துக்கொள்ளப்படும்முன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன, கேள் என்றான். அதற்கு எ- சா: உம்மிடத்திலுள்ள ஆவியின்வரம் எனக்கு இரட்டிப்பாய் கிடைக் கும்படி வேண்டுகிறேன்

## 2. இரட்டிப்பான நன்மை

சகரியா 9:12 நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்கு திரும்புங் கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன் சங்கீதம் 85:12 கர்த்தர் நன்மையானதைத் தருவார்.
சங்கீதம் 84:11 உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மை...

## 3. இரட்டிப்பான சுதந்தரம்

ஏசாயா 61:7 உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனை யாய்ப் பலன் வரும்; இலட்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப் பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி உண்டாகும்.

## 4. இரட்டிப்பான கனம்

1தீமோத்தேயு 5:17 நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிற வர்களை, இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராக எண்ணவேண்டும்.

## 5. இரட்டிப்பான பங்கு

1சாமுவேல் 1:5 எல்க்கானா அன்னாளைச் சிநேகித்தபடியினால், அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பான்; கர்த்தரோ அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார்.

# 14. மனதுருகும் தெய்வம்

ஏசாயா 30:18 உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்

ஏசாயா 54:10(7-10) மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும்... இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசாயா 55:7(6-13) துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக் காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்.

மத்தேயு 20:34 (29-34) குருடர்மீது மனதுருகினார்

மாற்கு 1:41 (40-42) குஷ்டரோகியின்மீது மனதுருகினார்

லூக்கா 7:13 (11-15) நாயீன் ஊர் விதவையின்மீது மனதுருகினார்

## 1. மனதுருகும் மேய்ப்பனாய் இருக்கிறார்

மத்தேயு 9:36 (35-38) அவர் திரளான ஜனங்களைக் கண்ட பொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடி யால், அவர்கள்மேல் மனதுருகி...

மாற்கு 6:34 (34-44) இயேசு கரையிலே வந்து, அநேக ஜனங்க ளைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி...

## 2. மனதுருகும் தகப்பனாய் இருக்கிறார்

லூக்கா 15:20 (11-24) இளையகுமாரன் எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும் போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ் செய்தான்.

## 3. மனதுருகும் சமாரியனாய் இருக்கிறார்

லூக்கா 10:33 (30-37) பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்.

# 15. கர்த்தருக்குக் காத்திருங்கள்

சங்கீதம் 27:14; 31:24 கர்த்தருக்குக் காத்திரு, திடமனதாயிரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார், கர்த்தருக்கே காத்திரு.

## 1. காத்திருக்கிறவர்கள் புதுபெலன் அடைவார்கள்

ஏசாயா 40:31 (29-31) கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படை யார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

சங்கீதம் 37:7 கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு

நெகேமியா 8:10 கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே பெலன்

## 2. காத்திருக்கிறவர்கள் பூமியைச் சுதந்தரிப்பர்கள்

சங்கீதம் 37:9 பொல்லாதவர்கள் அறுப்புண்டுபோவார்கள்; கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

சங்கீதம் 25:12,13 கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களின் சந்ததி

சங்கீதம் 69:35,36 ஊழிக்காரரின் சந்ததியார் சுதந்தரிப்பார்கள்

சங்கீதம் 37:11,22,29,34 சாந்தகுணமுள்ளவர்கள், ஆசீர்வதிக்ப் பட்டவர்கள், நீமான்கள், காத்திருக்கிறவர்கள் சுதந்தரிப்பார்கள்.

மத்தேயு 5:5 சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.

## 3. காத்திருக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போகார்கள்

சங்கீதம் 25:3 உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும்; முகாந்தரமில்லாமல் துரோகம்பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப்போவார்களாக

ஏசாயா 49:23 நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அறிந்துகொள்வாய்.

ஏசாயா 50:7 ஆண்டவர் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லை

சங்கீதம் 69:6; சங்கீதம் 22:5; 25:20; 31:17; 34:5 ஏசாயா 54:4; யோவேல் 2:26; 2தீமோத்தேயு 1:12

# 16. கிரீடம் சூட்டும் கர்த்தர்

## 1. ஜீவ கிரீடம்

யாக்கோபு 1:12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.

வெளிப். 2:10 நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.

## 2. வாடாத கிரீடம்

1பேதுரு 5:4 (1-4) மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்யுங்கள். அப்படி செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப் படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.

## 3. நீதியின் கிரீடம்

2தீமோத்தேயு 4:8 (7-8) இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்;

## 4. பரிசுத்த கிரீடம்

லேவியராகமம் 8:9 (1-9) அவன் தலையிலே பாகையைத் தரித்து, பாகையின்மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டத்தைக் கட்டினான்.

## 5. பொற் கிரீடம்

சங்கீதம் 21:3 (1-7) உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு எதிர்கொண்டுவந்து, அவர் சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர்

## 6. மகிமையான கிரீடம்

நீதிமொழிகள் 4:9 (1-10) அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக்கொடுக்கும்; அது மகிமையான கிரீடத்தைச் சூட்டும்

## 7. அலங்காரமான கிரீடம்

ஏசாயா 62:3 (1-8) கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும் உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்

# 17. உற்சாகமாயிருங்கள்

## 1. உற்சாகமாய் சேவியுங்கள்

1நாளாகமம் 28:9 என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்.

யோசுவா 24:14; 1சாமுவேல் 12:20; சங்கீதம் 2:11

## 2. உற்சாகமாய் செய்யுங்கள்

நீதிமொழிகள் 31:13 ஆட்டுமயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலைசெய்கிறாள்.

ரோமர் 12:8 இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்ய...

1பேதுரு 5:2,3 உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை மேய்த்து, கட்டாயமாய் அல்ல... உற்சாக மனதோடும்...

## 3. உற்சாகமாய் செலுத்துங்கள்

உபாகமம் 23:23 உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனைபண்ணிச் சொன்ன உற்சாகப- யைச் செலுத்தித் தீர்ப்பாயாக. எஸ்றா 8:28

## 4. உற்சாகமாய் கொடுங்கள்

யாத்திராகமம் 25:2 இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக.

1நாளாகமம் 29:9; எஸ்றா 1:6; எஸ்றா 2:68; 2கொரிந்தியர் 9:7

## 5. உற்சாகமாய் கைக்கொள்ளுங்கள்

2நாளாகமம் 31:4 (எசேக்கியா) ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய நியாயப்பிரமானத்தை உற்சாகமாய் கைக்கொள்ளும்படி, அவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும் எருசலேம் குடிகளுக்கும் கட்டளையிட்டான்.

# 18. ஆலயம் ஒன்றே போதும்

சங்கீதம் 122:1 கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.

## 1. ஆலயத்தில் காத்திருங்கள்

சங்கீதம் 84:10 ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமிய கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்

நீதிமொழிகள் 8:34; ஏசாயா 40:31; சங்கீதம் 5:3,7; சங்கீதம் 25:5,21; சங்கீதம் 27:14; சங்கீதம் 130:5,6; சங்கீதம் 147:11; மீகா 7:7

## 2. ஆலயத்தில் தங்கியிருங்கள்

சங்கீதம் 27:4 கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படி யாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படி யாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

சங்கீதம் 26:8; சங்கீதம் 63:2; 1பேதுரு 4:14

## 3. ஆலயத்தில் நீங்காதிருங்கள்

லூக்கா 2:37 எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தைவிட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள்.

வெளிப். 3:12; நீதிமொழிகள் 5:7

## 4. ஆலயத்தில் வாஞ்சையாயிருங்கள்

சங்கீதம் 84:2 என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங் களின்மேல் வாஞ்சையும் தவனுமாயிருக்கிறது.

1நாளாகமம் 29:3 தாவீது தன் தேவனுடைய ஆலயத்தின்மீதுள்ள வாஞ்சையினால் அனைத்தையும் கொடுத்தான்.

சங்கீதம் 91:14 வாஞ்சையாயிருப்பவனை விடுவிப்பார்.

# 19. தேவனுக்குப் பயந்திருங்கள்

சங்கீதம் 112:1 அல்லேலுயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்

சங்கீதம் 128:1 கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்.

சங்கீதம் 25:14 கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது.

சங்கீதம் 103:13 கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்

சங்கீதம் 111:5 தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார்

சங்கீதம் 145:19 தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்...

## 1. தேவனுக்குப் பயந்த யோபு

யோபு 1:1,8; 2:3 ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்.

## 2. தேவனுக்குப் பயந்த கொர்நே யு

அப்போஸ்தலர் 10:2 (1-8) அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிந்தான்.

## 3. தேவனுக்குப் பயந்த அனனியா

நெகேமியா 7:2 நான் என் சகோதரனாகிய ஆனானியையும், அநேகரைப்பார்க்கிலும் உண்மையுள்ளவனும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த அரமனைத் தலைவனாகிய அனனியாவையும், எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினேன்.

## 4. தேவனுக்குப் பயந்த மருத்துவச்சிகள் (சிப்பிராள், பூவாள்)

யாத்திராகமம் 1:20,21 (15-22) தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மைசெய்தார். ஜனங்கள் பெருகி மிகுதியும் பலத்துப் போனார்கள். மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்.

## 20. குறைவை நிறைவாக்குபவர்

பி- ப்பியர் 4:19 என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமை யிலே நிறைவாக்குவார்.

1கொரிந்தியர் 13:10 நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்

### 1. அப்பத்தின் குறைவை நிறைவாக்கினார்

1இராஜாக்கள் 17:16 (9-16) கர்த்தர் எ- யாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை; கலசத்தில் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை. யோவான் 6:1-13 ஐந்து அப்பம் இரண்டு மீன்

### 2. இரசத்தின் குறைவை நிறைவாக்கினார்

யோவான் 2:3 (1-11) திராட்சரசங்குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள். (கானா ஊர் க- யாணத்தில் தண்ணீரை ரசமாக்கினார்)

### 3. ஞானத்தின் குறைவை நிறைவாக்கினார்

யாக்கோபு 1:5 (5-8) உங்களில் ஒருவன் ஞானத்தில் குறை வுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக் கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனி டத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக் கப்படும். 1இராஜாக்கள் 3:5-14 சாலொமோனுக்கு ஞானம்

### 4. இஸ்ரவேலரின் குறைவை நிறைவாக்கினார்

உபாகமம் 2:7 உன் தேவனாகிய கர்த்தர் உன் கைக்கிரியை களிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்; இந்த நாற்பது வருஷமும்... உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லை

நெகேமியா 9:21 (9-21)

### 5. சீடர்களின் குறைவை நிறைவாக்கினார்

லூக்கா 22:35 இயேசு சீடர்களை நோக்கி: நான் உங்களைப் பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது, ஏதாகிலும் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள்.

# 21. சித்தத்தைச் செய்யும் கர்த்தர்

சங்கீதம் 135:6 (1-8) வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும், கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்.
சங்கீதம் 115:3 நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.

## 1. தமக்குச் சித்தமானவனை அழைக்கிறார்

மாற்கு 3:13 (13-19) இயேசு: ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள். (சீடர்களை அழைத்தல்)
1தெசலோனிக்கேயர் 5:24 உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார்
ஏசாயா 45:3 உன்னைப் பேர்சொல்- அழைக்கிற தேவன்

## 2. தமக்குச் சித்தமானவனை சுத்தமாக்குகிறார்

மத்தேயு 8:3 இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.
(மாற்கு 1:40,41; லூக்கா 5:12,13)

## 3. தமக்குச் சித்தமானவனை உயர்த்துகிறார்

தானியேல் 5:19,21 அவர் தமக்குச் சித்தமானவனைக் கொன்றுபோடுவார், தமக்குச் சித்தமானவனை உயிரோடே வைப்பார்; தமக்குச் சித்தமானவனை உயர்த்துவார், தமக்குச் சித்தமானவனைத் தாழ்த்துவார். தானியேல் 4:17,25,32; யாக்கோபு 4:10; சங்கீதம் 27:5; 37:34; அப்போஸ்தலர் 13:22 (தாவீது)

## 4. தமக்குச் சித்தமானவனை உயிர்ப்பிக்கிறார்

யோவான் 5:21 பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். யோவான் 11:11-45 லாசருவை எழுப்புதல்
ரோமர் 8:11; யோவான் 6:39,40; எபேசியர் 2:1,5

# 22. உதவி செய்யும் கர்த்தர்

1சாமுவேல் 7:12(1-14) சாமுவேல் ஒரு கல்லை எடுத்து, மிஸ்பா வுக்கும் சேனுக்கும் நடுவாக நிறுத்தி, இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்தார் என்று சொல்- , அதற்கு எபேனேசர் என்று பேரிட்டான்.

## 1. சோதனைகளில் நமக்கு உதவிசெய்கிறார்

எபிரெயர் 2:18 (12-18) அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்ட தினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.

1கொரிந்தியர் 10:13 திராணிக்குமேலாக சோதிக்க இடங்கொடா மல்... தப்பிக்கொள்ள போக்கையும் உண்டாக்குவார்.

வெளிப். 3:10 சோதனைகாலத்திற்குத் தப்பும்படி...காப்பேன்.

யாக்கோபு 1:12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்

2பேதுரு 2:9 தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும்... அறிந்திருக்கிறார்.

## 2. பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்

ரோமர் 8:26(26-30) அந்தபடியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்... ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்...

2நாளாகமம் 14:11 பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகி லும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்.

2கொரிந்தியர் 12:9 பலவீனத்திலே என் பலம் பூரணமாய்...

1கொரிந்தியர் 1:27 பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்

## 3. இக்கட்டுகளில் நமக்கு உதவிசெய்கிறார்

சங்கீதம் 37:39-40 நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம் கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களை விடுவிப்பார்.

சங்கீதம் 60:11 இக்கட்டுகளில் உதவி செய்யும்

சங்கீதம்107:6,13,19,28இக்கட்டுகளில் விடுவித்தார், இரட்சித்தார்.

# 23. கர்த்தர் பெரியவர்

1நாளாகமம் 16:25; சங்கீதம் 96:4 கர்த்தர் பெரியவரும் மிகவும் துதிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார்; எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே. யாத்திராகமம் 18:11; 2நாளாகமம் 2:5; சங்கீதம் 48:1; சங்கீதம் 96:4; சங்கீதம் 135:5; சங்கீதம் 145:3; சங்கீதம் 147:5; எரேமியா 10:6

## 1. உங்கள் உள்ளே இருப்பவர் பெரியவர்

1யோவான் 4:4 பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்தி- ருக்கிறவனிலும் உங்களி- ருக்கிறவர் பெரியவர்.

உபாகமம் 7:21 உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார், அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்.

## 2. உங்கள் நடுவே இருப்பவர் பெரியவர்

ஏசாயா 12:6 சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி; இஸ்ரவே- ன் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவரா யிருக்கிறார். செப்பனியா 3:17 உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார் அவர் வல்லமையுள்ளவர்

சகரியா 2:5,10 நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன்

## 3. உங்கள் கூடவே இருப்பவர் பெரியவர்

லூக்கா 1:28,32 கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்... அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்.

மத்தேயு 28:20; ஏசாயா 41:10; அப்போஸ்தலர் 18:10; எரேமியா 1:8,19; எரேமியா 42:11

### இதர வசனங்கள்

மத்தேயு 12:6 தேவாலயத்திலும் பெரியவர்

மத்தேயு 12:41 யோனாவிலும் பெரியவர்

மத்தேயு 12:42 சாலொமோனிலும் பெரியவர்

எரேமியா 32:19 யோசனையில் பெரியவர்

1யோவான் 3:20 இருதயத்திலும் பெரியவர்

# 24. நம்மைக் காப்பாற்றும் கர்த்தர்

சங்கீதம் 16:1,5 தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பி யிருக்கிறேன். சங்கீதம் 17:9 உம்முடைய செட்டைகளின் நிழ- லே என்னைக் காப்பாற்றும் சங்கீதம் 25:20; சங்கீதம் 34:20; சங்கீதம் 121:1-8; சங்கீதம் 139:13; எரேமியா 31:10; 2தீமோத்தேயு 4:18

## 1. அன்புகூருகிறவர்களைக் காப்பாற்றுகிறார்

சங்கீதம் 145:20 கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.
சங்கீதம் 18:1; மத்தேயு 22:37:39

## 2. நம்புகிறவர்களைக் காப்பாற்றுகிறார்

சங்கீதம் 5:11 உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்

## 3. பரதேசிகளைக் காப்பாற்றுகிறார்

சங்கீதம் 146:9 பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்; துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப்போடுகிறார்.

## 4. பரிசுத்தவான்களைக் காப்பாற்றுகிறார்

சங்கீதம் 97:10 அவர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைக் காப்பாற்றி, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவிக்கிறார். நீதிமொழிகள் 2:8; 1சாமுவேல் 2:9

## 5. நீதிமான்களைக் காப்பாற்றுகிறார்

சங்கீதம் 34:19-20 நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார். சங்கீதம் 34:15,17; 1பேதுரு 3:12

## இவர்களையும் காப்பாற்றினார்

ஆதியாகமம் 28:20 யாக்கோபு; உபாகமம் 33:12 பென்யமீன்; யோசுவா 24:17 யோசுவா; 2சாமுவேல் 6:14 தாவீது

# 25. நீங்கள் ஆயத்தமாயிருங்கள்

சங்கீதம் 5:3 கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன். சங்கீதம் 57:7; சங்கீதம் 108:1

## 1. கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாயிருங்கள்

ஆமோஸ் 4:12 (1-13) இஸ்ரவேலே, இந்த பிரகாரமாக உனக்குச் செய்வேன்; இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப் போகிறபடியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

மத்தேயு 25:1-10 புத்தியுள்ள ஸ்திரிகளின் ஆயத்தம்

மத்தேயு 25:31-41; மத்தேயு 24:44

## 2. கர்த்தரைப் பின்பற்ற ஆயத்தமாயிருங்கள்

லூக்கா 22:33 பேதுரு: ஆண்டவரே, காவ- லும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.

மத்தேயு 8:19 வேதபாரகன் மத்தேயு 19:21(16-26) வா- பன் மத்தேயு 19:27,28 பின்பற்றினவர்களுக்கு இஸ்ரவே- ன் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பார்கள்.

## 3. கர்த்தருக்காக மரிக்க ஆயத்தமாயிருங்கள்

அப்போஸ்தலர் 21:13(10-17) பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப் படுவதற்குமாத்திரமல்ல மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்

பி- ப்பியர் 1:21 கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

யோவான் 11:6 திதிமு எனப்பட்ட தோமா

மாற்கு 14:31 பேதுரு-மரிக்கவேண்டியதாயிருந்தாலும் மறுத- க்க...

## 4. கர்த்தருக்காக உத்தரவுசொல்ல ஆயத்தமாயிருங்கள்

1பேதுரு 3:15 (8-19) உங்களி- ருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்

# 26. பலப்படுத்தும் கர்த்தர்

பி- ப்பியர் 4:13(10-14) என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. 1தீமோத்தேயு 1;12 என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் ஸ்தோத்தரிக்கிறேன்.

ஏசாயா 41:10; 1பேதுரு 5:10; 1நாளாகமம் 29:12; யாத்திராகமம் 15:2; சங்கீதம் 28:7; ஏசாயா 12:2; ஆபகூக் 3:19

## 1. ராஜ்யத்தைப் பலப்படுத்துகிறவர்

2நாளாகமம் 1:1 தாவீதின் குமாரனாகிய சாலொமோன் தன் ராஜ்யத்திலே பலப்பட்டான்; அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனுடனே இருந்து அவனை மிகவும் பெரியவனாக்கினார்.

2நாளாகமம் 20:6 தேவரீர் ராஜ்யங்களை ஆளுகிறவர்

எரேமியா 1:10 எரேமியாவை ராஜ்யங்களின்மேல் ஏற்படுத்தி

எபிரெயர் 11:33 விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள்

## 2. ஊழியத்தைப் பலப்படுத்துகிறவர்

2தீமோத்தேயு 4:17 கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேற்றுவதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்.

2கொரிந்தியர் 12:9 பலவீனத்திலே என் பலம் பூரணமாய்...

2தீமோத்தேயு 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவி...

## 3. சரீரத்தைப் பலப்படுத்துகிறவர்

ஏசாயா 40:29(29-31) சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்.

நியாயதிபதிகள் 16:28 சிம்சோனைக் கர்த்தர் பலப்படுத்தினார்

1சாமுவேல் 26:25 தாவீதே நீ மேன்மேலும் பலப்படுவாய்

உபாகமம் 8:18(16-20) சம்பாதிக்க பெலனைக் கொடுக்கிறவர்

# 27. நம்மை ஆதரிக்கும் ஆண்டவர்

சங்கீதம் 71:6 நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்; என் தாயின் வயிற்றி- ருந்து என்னை எடுத்தவர் நீரே

சங்கீதம் 119:116,117 நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும்... அப்பொழுது நான் இரட்சிக்கப்பட்டு, எக்காலமும் உம்முடைய பிரமாணங்களின் பேரில் நோக்கமாயிருப்பேன்

## 1. பாரமுள்ளவரை ஆதரிக்கிறவர்

சங்கீதம் 55:22 கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்

மத்தேயு 11:28 வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்...

## 2. ஆபத்திலுள்ளவரை ஆதரிக்கிறவர்

சங்கீதம் 18:18; 2சாமுவேல் 22:19 என் ஆபத்து நாளிலே எனக்கு எதிரிட்டு வந்தார்கள்; கர்த்தரோ எனக்கு ஆதரவு

சங்கீதம் 20:1,2 ஆபத்துநாளிலே கர்த்தர் உமது ஜெபத்தைக் கேட்பாராக... சீயோனிருந்து உம்மை ஆதரிப்பாராக

ஆதியாகமம் 45:7; 47:12,17 யோசேப்பு தன் சகோதரருக்கு ஆகாரம் கொடுத்து ஆதரித்துவந்தான்.

ஆதியாகமம் 48:14-20 யாக்கோபு யோசேப்பின் பிள்ளைகளாகிய எப்ராயீமையும் மனாசேயையும் ஆசீர்வதித்தல்

லேவியராகமம் 25:35 உன் சகோதரனை ஆதரிக்கவேண்டும்

## 3. திக்கற்றவரை ஆதரிக்கிறவர்

சங்கீதம் 146:9 பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்; துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப்போடுகிறார்.

ஏசாயா 1:17 ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து... விசாரியுங்கள்

ஏசாயா 42:1 நான் ஆதரிக்கிற என் தாசன்

ரூத் 2:20(12-16) நம்மை ஆதரிக்கிற சுதந்தரவாளி போவாஸ்

# 28. உண்மை தரும் நன்மை

நீதிமொழிகள் 28:20 உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர் வாதங்களைப் பெறுவான்.

மத்தேயு 25:21,23 கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால் அநேகத்தில் அதிகாரியாக்குவார் (தாலந்து உவமை)

## 1. உண்மையாய் கூப்பிடுபவருக்கு சமீபமாயிருக்கிறார்

சங்கீதம் 145:18 உண்மையாய்த் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்

ஏசாயா 55:6 கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்

சங்கீதம் 34:18 நொருங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நறுங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்

## 2. உண்மையாய் நடப்பவர்மேல் பிரியமாயிருக்கிறார்

நீதிமொழிகள் 12:22 பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பான வைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்

சங்கீதம் 37:23 நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் பிரியமாயிருக்கிறார்

அப்போஸ்தலர் 5:1-11 அனனியா சப்பிராள் பொய்சொல்லுதல்

## 3. உண்மையாய் இருப்பவருக்கு கிரீடமளிக்கிறார்

வெளிப்படுத்தின விசேஷம் 2:10 சிமிர்னா சபையைப் பார்த்து: நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே... நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.

## இவர்களின் உண்மை

எண்ணாகமம் 22:7; எபிரெயர் 3:2 மோசேயின் உண்மை

2இராஜாக்கள் 20:1-6 எசேக்கியாவின் உண்மை

நெகேமியா 7:2 அனனியாவின் உண்மை

எபிரெயர் 3:1-6 கிறிஸ்துவின் உண்மை

1தீமோத்தேயு 1:12 பவு- ன் உண்மை

# 29. இருதயத்தைப் பார்க்கும் இறைவன்

1சாமுவேல் 16:7 மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்.
எரேமியா 20:11,12 உள்ளந்திரியங்களையும் இருதயத்தையும் பார்க்கிற சேனைகளின் கர்த்தாவே...

## 1. உங்கள் இருதயம் கலங்கவேண்டாம்

யோவான் 14:1 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிரு...
யோசுவா 1:9 கலங்காதே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.
1நாளாகமம் 28:20 நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு
2நாளாகமம் 20:15,17; 32:7 பயப்படாமலும் கலங்காமலும் இரு

## 2. உங்கள் இருதயம் பயப்படவேண்டாம்

யோவான் 14:27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இரு...
ஏசாயா 41:10,13,14 நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்.
ஏசாயா 43:1,5 பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன்.
ஏசாயா 54:4 பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை
வெளிப் 2:10 நீ எவ்வளவும் பயப்படாதே, மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடம் தருவேன். (சிமிர்னா)

## 3. உங்கள் இருதயம் துவளவேண்டாம்

உபாகமம் 20:3 இஸ்ரவேலே, கேளுங்கள்; இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள்; உங்கள் இருதயம் துவளவேண்டாம்; நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம்
எரேமியா 51:46 உங்கள் இருதயம் துவளாமலும், தேசத்தில் கேட்கப்படும் செய்தியினால் நீங்கள் பயப்படாமல் இருங்கள்

# 30. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்

நீதிமொழிகள் 2:6 கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.

1கொரிந்தியர் 1:24,31 எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்...

ஏசாயா 11:2 ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.

## 1. பயப்படுகிறவனுக்குத் தருகிறார்

யோபு 28:28 இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்றார்

சங்கீதம் 110:10; நீதிமொழிகள் 1:7; நீதிமொழிகள் 9:10; நீதிமொழிகள் 15:33 கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்.

## 2. நல்லவனுக்குத் தருகிறார்

பிரசங்கி 2:16 தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்

## 3. நீதிமானுக்குத் தருகிறார்

நீதிமொழிகள் 2:7 அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்.

## 4. கேட்கிறவனுக்குத் தருகிறார்

யாக்கோபு 1:5 உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

### இவர்களுக்கு ஞானம் தந்தார்

ஆதியாகமம் 41:39(33-39) யோசேப்பின் ஞானம்
யாத்திராகமம் 35:33(30-33) பெசலேயே- ன் ஞானம்
ஆதியாகமம் 41:39(33-39) யோசேப்பின் ஞானம்
தானியேல் 5:11,14 தானியே- ன் ஞானம்

# 31. தீமையை நன்மையினாலே வெல்லுங்கள்

ரோமர் 12:21 நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.
மத்தேயு 5:37,39 தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்.
2தீமோத்தேயு 2:24; 1தெசலோனிக்கேயர் 3:3; 1சாமுவேல் 24:17; ஆதியாகமம் 50:20; ஆபகூக் 1:13

## 1. தீமையை விலக்கிடுங்கள்

சங்கீதம் 37:27 தீமையை விட்டு விலகி, நன்மை செய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய் சங்கீதம் 34:14; நீதிமொழிகள் 3:7; நீதிமொழிகள் 4:27; நீதிமொழிகள் 16;6,17

## 2. தீமையை வெறுத்திடுங்கள்

ரோமர் 12:9 உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்.
சங்கீதம் 97:10; நீதிமொழிகள் 8:13; ஆமோஸ் 5:15

## 3. தீமையைச் செய்யாதிருங்கள்

1தெசலோனிக்கேயர் 5:15 ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். நீதிமொழிகள் 17:13; நீதிமொழிகள் 31:12; சங்கீதம் 34:16; ஏசாயா 14:20; 1பேதுரு 3:12

## 4. தீமையைப் பின்பற்றாதிருங்கள்

3யோவான் 1:11 பிரியமானவனே, நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று, நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை

## 5. தீமையைத் தேடாதிருங்கள்

நீதிமொழிகள் 11:27 நன்மையை ஜாக்கிரதையுடன் தேடுகிறவன் தயையைப் பெறுவான்; தீமையைத் தேடுகிறவனுக்கோ தீமையே வரும். ஆமோஸ் 5:14

# 32. திறக்கும் கர்த்தர்

## 1. கண்களைத் திறந்தார்

ஆதியாகமம் 21:19(9-20) ஆகாரின் கண்களைத் திறந்தார்
எண்ணாகமம் 23:31(21-34) பிலேயாமின் கண்களைத் திறந்தார்
2இராஜாக்கள் 6:17,20(8-23) வேலைக்காரரின் கண்களைத் திறந்...
ஆதியாகமம் 3:7 ஆதாம் ஏவாளின் கண்களைத் திறந்தார்
சங்கீதம் 119:18, சங்கீதம் 146:8; மத்தேயு 9:30; யோவான் 9:6,7

## 2. செவியைத் திறந்தார்

ஏசாயா 50:4,5 கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார்; நான் எதிர்க்கவுமில்லை, நான் பின்வாங்கவுமில்லை

யோபு 36:15 சிறுமைப்பட்டவர்களை அவர் சிறுமைக்கு நீங்கலாக்கி, அவர்கள் செவியைத் திறக்கிறார்

மாற்கு 7:35 கொன்னைவாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர் அவனுடைய செவியைத் திறந்தார்.

## 3. வாயைத் திறந்தார்

எண்ணாகமம் 22:28 கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார்; அது பிலேயாமைப் பார்த்து: நீர் என்னை இப்பொழுது மூன்று தரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன் என்றது.

## 4. இருதயத்தைத் திறந்தார்

அப்போஸ்தலர் 16:14 தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்-யவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்.

## 5. மனதைத் திறந்தார்

லூக்கா 24:45,46 அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரி- ருந்தெழுந்திருக்கவும் வேண்டிய...

# 33. சகாயம் செய்யும் கர்த்தர்

சங்கீதம் 124:8 நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது

சங்கீதம் 121:1,2 வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தரிடத்தி- ருந்து எனக்கு ஒத்தாசை வரும்

ஓசியா 13:9 இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண் டாய்; ஆனாலும் என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு

## 1. திக்கற்றவருக்கு சகாயர்

சங்கீதம் 10:14 ஏழையானவன் தன்னை உமக்கு ஒப்புவிக்கிறான்; திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே

சங்கீதம் 68:5 திக்கற்ற பிள்ளைகளுக்குச் தகப்பனாயிருக்கிறார்

சங்கீதம் 146:9 திக்கற்ற பிள்ளைகளை ஆதரிக்கிறார்

சங்கீதம் 102:16 திக்கற்றவர்களின் ஜெபத்தைக் கேட்கிறார்

யோவான் 14:18 நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்

## 2. தெரிந்துகொண்டவருக்கு சகாயர்

ஏசாயா 41:9,10 நீ பயப்படாதே, நான் உன் தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.

சங்கீதம் 135:4 கர்த்தர் யாக்கோபை தமக்காகவும், இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார்.

## 3. தேடுகிறவருக்கு சகாயர்

சங்கீதம் 27:8,9 உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடாதேயும்; நீரே எனக்குச் சகாயர்; என் இரட்சிப்பின் தேவனே, என்னை நெகிழ விடாதிரும் என்னைக் கைவிடாதிரும்.

### இதர வசனங்கள்

1சாமுவேல் 7:12 இம்மட்டும் உதவின எபெனேசர்

2நாளாகமம் 14:11 உதவிசெய்வது லேசான காரியம்

ரோமர் 8:26 பலவீனங்களில் ஆவியானவர் உதவிசெய்கிறார்.

# 34. ஜெயிக்கவே நீ பிறந்தாய்

1யோவான் 5:4 தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்
நீதிமொழிகள் 21:31 ஜெயமோ கர்த்தரால் வரும். ரோமர் 8:37; 1கொரிந்தியர் 15:57; சங்கீதம் 41:11; நீதிமொழிகள் 24:6; ரோமர் 12:21

## 1. தானியே ன் ஜெயம்

தானியே- ன் 6:28 தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சிய னாகிய கோரேசுடைய ராஜ்யபாரகாலத்திலும் தானியே- ன் காரியம் ஜெயமாயிருந்தது.

## 2. தாவீதின் ஜெயம்

1சாமுவேல் 17:50 (14-51) தாவீது ஒரு கவணினாலும் ஒரு கல்-னாலும் பெ- ஸ்தனை மேற்கொண்டு, அவனை மடங்கடித்து, அவனைக் கொன்றுபோட்டான்

## 3. உசியாவின் ஜெயம்

2நாளாகமம் 26:7(1-7) பெ- ஸ்தரையும் கூர்பாகா- லே குடியிருக்கிற அரபியரையும் வெல்ல, தேவன் அவனுக்குத் துணை நின்றார்

## 4. கிறிஸ்துவின் ஜெயம்

யோவான் 16:33 உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்.
ஏசாயா 25:8; கொலோசெயர் 2:15

### ஜெயங்கொள்ளுகிறவர்களின் ஆசீர்வாதம்

வெளிப். 2:7 ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பான்
வெளிப். 2:11 இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை
வெளிப். 2:17 புதிய நாமத்தை கொடுப்பார்
வெளிப். 2:26 ஜாதிகளின்மேல் அதிகாரம்
வெளிப். 3:5 வெண்வஸ்திரம் தரிக்கப்படும்
வெளிப். 3:12 ஆலயத்தில் தூணாக்குவார்
வெளிப். 3:21 சிங்காசனத்தில் உட்கார அருள்செய்வார்.
வெளிப். 21:7 எல்லாவற்றறையும் சுதந்தரிப்பான்

# 35. விழுந்தாலும் எழுந்திருந்திருங்கள்

மீகா 7:8 என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப் படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்

நீதிமொழிகள் 24:16 நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கன் தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்.

## 1. துக்கத்தை விட்டு எழுந்திருங்கள்

யோசுவா 7:10 (10-26) கர்த்தர் யோசுவாவை நோக்கி: எழுந்திரு, நீ இப்படி முகங்குப்புற விழுந்து கிடக்கிறது என்ன?

எரேமியா 31:13 நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்

யோவான் 16:20 உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

## 2. தூக்கத்தை விட்டு எழுந்திருங்கள்

புலம்பல் 2:19 எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு

நியாயாதிபதிகள் 16:17,19 மடியில் உறங்கிய சிம்சோன்

1இராஜாக்கள் 19:5 செடியின் கீழ் உறங்கிய எ- யா

யோனா 1:6 கப்பல் அடியில் உறங்கிய யோனா

அப்போஸ்தலர் 20:9 மாடியில் உறங்கிய ஐத்திகு

மத்தேயு 26:40-44 தோட்டத்தில் உறங்கிய சீடர்கள்

நீதிமொழிகள் 6:9,10; நீதிமொழிகள் 20:13; நீதிமொழிகள் 23:21; எபேசியர் 5:14; 1தெசலோனிக்கேயர் 5:6

## 3. தூசியை விட்டு எழுந்திருங்கள்

ஏசாயா 52:2 (1-3) தூசியை உதறிவிட்டு எழுந்திரு; எருசலேமே, வீற்றிரு; சிறைப்பட்டுபோன சீயோன் குமாரத்தியே, உன் கழுத்தி லுள்ள கட்டுகளை அவிழ்த்துவிடு.

லூக்கா 9:5; லூக்கா 10:11 உங்களை ஏற்றுக்கொள்ளதவர்களை விட்டு புறப்படும் போது தூசியை உதறிப்போடுங்கள்

அப்போஸ்தலர் 13:51; மாற்கு 10:49; யோவான் 5:8

# 36. ஆழம் சொல்லும் செய்தி

## 1. ஆழத்தில் வேர் கொள்ளுதல்

1இராஜாக்கள் 19:30; ஏசாயா 37:31 யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே கனி கொடுப்பார்கள்.

நீதிமொழிகள் 12:12 நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும்

மாற்கு 4:5,17 கற்பாறையில் விழுந்த விதை ஆழத்தில் வேர் கொள்ளாதபடியால் உலர்ந்துபோயிற்று.

## 2. ஆழத்தில் அஸ்திபாரம் போடுதல்

லூக்கா 6:47-48 என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன்... ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்

1சாமுவேல் 2:8 பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள்;

1கொரிந்தியர் 3:11 அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது

எபேசியர் 2:20 அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள் அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்.

## 3. ஆழத்தில் வலை போடுதல்

லூக்கா 5:4 அவர் (இயேசு) போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்.

யோவான் 21:6(1-14) உயிர்த்தெழுந்த பிறகு வலையைப் போட...

## இதர வசனங்கள்

சங்கீதம் 92:5 கர்த்தருடைய யோசனைகள் ஆழமானது

நீதிமொழிகள் 20:5 மனிதனுடைய யோசனைகள் ஆழமானது

தானியேல் 2:22 அவரே ஆழமும் மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர்

மீகா 7:19 பாவத்தை ஆழத்தில் போட்டுவிடுவார்.

# 37. வாழவே நீ பிறந்தாய்

## 1. வெறுப்பில் சாவை விரும்பும் (மோசே)

எண்ணாகமம் 11:4-15 இஸ்ரவேல் ஜனங்கள் இறைச்சிக்காக அழுது மோசேயிடம் கேட்கும்போது, என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்றுபோடும் என்று வேண்டிக்கொண்டான்.

எண்ணாகமம் 12:2-8 பிறகு கர்த்தர் முகமுகமாய் பேசினார்

## 2. பயத்தில் சாவை விரும்பும் (எ யா)

1இராஜாக்கள் 19:1-8 எ- யா தீர்க்கத்தரிசி ஆகாப் ராஜாவின் மனைவி யேசபேலுக்கு பயந்து, தன் பிராணனைக் காக்க வனாந் தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த் தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் என்று வேண்டு...

2இராஜாக்கள் 2:9-11 பிறகு எ- யா மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு ஏறிபோனான்.

## 3. கோபத்தில் சாவை விரும்பும் (யோனா)

யோனா 4:1-8 நினிவே மக்களை அழிக்காததனால் யோனாவுக்கு மிகவும் விசனமாயிருந்தது. இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னை விட்டு எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோ டிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்.

## 4. சாபத்தில் சாவை விரும்பும் (யோபு)

யோபு 3:1-11யோபு தன் பிறந்தநாளைச் சபித்து, நான் கர்ப்பத்தில் தானே அழியாமலும், கர்ப்பத்தி- ருந்து புறப்படுகிறபோதே சாகாமலும் போனதென்ன? என்று சபிக்க துவங்கினான்.

யோபு 42:12-17 பிறகு யோபு இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான்.

### இதர வசனங்கள்

1கொரிந்தியர் 9:1-27(15) பவுல் என் மேன்மைப்பாராட்டலை ஒருவன் அவத்தமாக்குகிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருமாயிருக்கும்

எரேமியா 20:17,18 கர்ப்பத்திலே நான் கொலைசெய்யப்படாமற் போனதென்ன? நான் கர்ப்பத்தி- ருந்து வெளிப்பட்டதென்ன?

# 38. உள்ளதைக் கொடுத்த உள்ளங்கள்

## 1. அடையை கொடுத்த உள்ளம்

1 இராஜாக்கள் 17:8-16 சாறிபாத் விதவை தேவ மனுஷனாகிய எ- யாவுக்கு தனக்கு இருந்த அடையைக் கொடுத்தாள். அதின் மூலம் பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத் தில் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை.

## 2. அப்பத்தைக் கொடுத்த உள்ளம்

யோவான் 6:1-13 இயேசுவின் வசனத்தைக் கேட்க வந்த 5000- க்கும் அதிகமான மக்களைப் போஷிக்க ஒரு சிறுவன் 5 கோதுமை அப்பங்களும் 2 மீன்களும் கொடுத்தான். அதை ஆண்டவர் ஆசீர்வதித்து மக்களுக்கும் சீடர்களுக்கும் கொடுத்தார்.

## 3. காணிக்கைக் கொடுத்த உள்ளம்

லூக்கா 21:1-4 ஒரு ஏழை விதவை வறுமையி- ருந்து தன் ஜீவ னத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள். அதை இயேசு மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகமாய் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

## 4. பொருட்களைக் கொடுத்த உள்ளம்

1நாளாகமம் 29:1-15 தாவீது அரசன்: என் தேவனுடைய ஆலயத் தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆல யத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியும்... கொடுக்கிறேன்.

## 5. பிள்ளையைக் கொடுத்த உள்ளம்

ஆதியாகமம் 22:1-18 ஆபிரகாம் தன் ஒரே மகனைக் கர்த்தருக்குப் ப- யிட கொடுத்தான்

நியாயாதிபதிகள் 11:29-40 யெப்தா தன் ஒரே மகளைக் கர்த்த ருக்குப் சர்வாங்கதகன ப- யிட்டான்.

1இராஜாக்கள் 3:26(16-27) பிள்ளையை விட்டுகொடுத்த தாய்...

## 6. உயிரையே கொடுத்த உள்ளம்

யோவான் 3:16; 1யோவான் 3:16; யோவான் 10:11,15 உலக மக்களுக் காகவும் ஆடுகளுக்காகவும் தன் உயிரையே கொடுத்தவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

# 39. இருந்தாலும் இல்லாவிட்டாலும்

## 1. விடுவிக்காமற்போனாலும்

தானியேல் 3:17-29 நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; விடுவிக்காமற் போனாலும்...

## 2. துளிர்விடாமற்போனாலும்

ஆபகூக் 3:17-19 அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒ- வமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடுகள் இல்லாமற்போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்.

## 3. கொன்றுபோட்டாலும்

யோபு 13:15 அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்;

## 4. சாய்ந்துபோனாலும்

சங்கீதம் 46:1-3 பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்தி ரத்தில் சாய்ந்துபோனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்.

## 5. அழிந்துபோனாலும்

2கொரிந்தியர் 5:1 பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு உண்டென்று அறிந்திருக்...

## 6. குடியிராமற்போனாலும்

2கொரிந்தியர் 5:7-9 நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற் போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.

## 7. வார்க்கப்பட்டுப்போனாலும் (ஊற்றப்பட்டு)

பி- ப்பியர் 2:17,18 மேலும், உங்கள் விசுவாசமாகிய ப- யின் மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன்.

# 40. மரிக்கும் வரை மறக்காதே

## 1. கர்த்தரை மறக்காதே

உபாகமம் 6:12 நீ அடிமைப்பட்டிருந்த வீடாகிய எகிப்து தேசத்தி - ருந்து உன்னைப் புறப்படப்பண்ணின கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

உபாகமம் 8:11 கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு

சங்கீதம் 6:12; தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்.

ஏசாயா 51:12 பூமியை அஸ்திபாரப்படுத்தி உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கு நீ யார்?

## 2. கட்டளையை மறக்காதே

உபாகமம் 4:10 உன் கண் கண்ட காரியங்களை நீ மறவாத படிக்கும்... உன் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்.

சங்கீதம் 119:93 நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன்; அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்.

## 3. வேதத்தை மறக்காதே

சங்கீதம் 119:61 துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள் ளையிட்டும், உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை

## 4. போதகத்தை மறக்காதே

நீதிமொழிகள் 3:1 என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது.

## 5. உபகாரங்களை மறக்காதே

சங்கீதம் 103:2 என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி... அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

## 6. உபசரிக்க மறக்காதே

எபிரெயர் 13:2 அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு.

## 7. நன்மைசெய்ய மறக்காதே

எபிரெயர் 13:16 அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட ப- களின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.

## 41. கர்த்தரால் வரும் பலன்கள்

### 1. ஒத்தாசை

சங்கீதம் 121:2 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்த ரிடத்தி- ருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

### 2. இரட்சிப்பு

சங்கீதம் 37:39 நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்.

### 3. பிள்ளைகள்

சங்கீதம் 127:4 இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்.

### 4. நாவின் பிரதியுத்தரம்

நீதிமொழிகள் 16:1 மனதின் யோசனைகள் மனுஷனுடையது; நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும்.

### 5. காரியசித்தி

நீதிமொழிகள் 16:33 சீட்டு மடியிலே போடப்படும்; காரியசித்தியோ கர்த்தரால் வரும்.

### 6. ஜெயம்

நீதிமொழிகள் 21:31 குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.

### 7. நம்புகிறது

சங்கீதம் 62:5 என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.

### 8. அறிவும் புத்தியும்

நீதிமொழிகள் 2:6 கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.

### இதர வசனங்கள்

ஏசாயா 40:10; 62:11 இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடே வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது.(வருகிறது)

வெளிப்படுத்தின விசேஷம் 22:12 இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

# 42. மனப்பூர்வமாய் செய்யுங்கள்

## 1. மனப்பூர்வமாய் செய்யுங்கள்

எபேசியர் 6:6 மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிற வர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்... செய்யுங்கள்.
கொலோசெயர் 3:24 எதைச் செய்தாலும், அதை மனுஷர் களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வ மாய் செய்யுங்கள். 1பேதுரு 5:2-3

## 2. மனப்பூர்வமாய் செலுத்துங்கள்

லேவியராகமம் 22:29 கர்த்தருக்கு ஸ்தோத்திரப- யைச் செலுத் துவீர்களானால் மனப்பூர்வமாய் அதைச் செலுத்துவீர்களாக.
சங்கீதம் 96:7; 29:1,2 கர்த்தருக்கு மகிமையையும், வல்லமையை யும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைத் செலுத்துங்கள்.

## 3. மனப்பூர்வமாய் கொடுங்கள்

யாத்திராகமம் 25:2; 35:29 மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக. 1நாளாகமம் 29:9,14,17 ஜனங்கள் ஆலயம் கட்டுவதற்காக மனப்பூர்வமாய் கொடுத்தார்கள்.

## 4. மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுங்கள்

நியாயாதிபதிகள் 5:2,9 ஜனங்கள் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்ததினிமித்தமும் அவரை ஸ்தோத்தரியுங்கள்.

## 5. மனப்பூர்வமாய் மன்னியுங்கள்

மத்தேயு 18:35 நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்...
மத்தேயு 6:14-15; எபேசியர் 4:32; கொலோசெயர் 3:13

## 6. மனப்பூர்வமாய் கீழ்படியுங்கள்

ரோமர் 6:17 முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்படிந்ததினாலே...

# 43. இரட்சிப்பு அளிக்கும் கர்த்தர்

## 1. கர்த்தரே இரட்சிப்பு

யாத்திராகமம் 15:2; சங்கீதம் 118:14 கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்;

யோபு 13:16 அவரே என் இரட்சிப்பு.

சங்கீதம் 3:8 இரட்சிப்பு கர்த்தருடையது.

சங்கீதம் 27:1 கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்.

சங்கீதம் 62:2,6,7; 69:29; அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை.

ஏசாயா 12:2 தேவனே என் இரட்சிப்பு, நான் பயப்படாமல் நம்பிக் கையாயிருப்பேன்... அவரே எனக்கு இரட்சிப்புமானவர்.

யோனா 2:9 இரட்சிப்பு கர்த்தருடையது என்றான்.

## 2. கர்த்தரால் இரட்சிப்பு

சங்கீதம் 37:39 நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்

சங்கீதம் 62:1 தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக் கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும்.

எரேமியா 3:23 இஸ்ரவே- ன் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே.

அப்போஸ்தலர் 4:12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை.

## 3. கர்த்தரிடத்தில் இரட்சிப்பு

சங்கீதம் 130:7 கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.

### இதர வசனங்கள்

ஆதியாகமம் 49:18; சங்கீதம் 20:6; 53:6; 119:41; 119:81; 119:155; 119:81; ஏசாயா 33:2; 46:13; 51:5; 51:8;56:1; புலம்பல் 3:26; லூக்கா 19:9; 2 தெசலோனிக்கேயர் 2:14

# 44. கர்த்தர் இன்றி எதுவுமில்லை

## 1. அவராலேயன்றி உலகம் உண்டாகவில்லை

யோவான் 1:3 சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை

1கொரிந்தியர் 8:6 பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.

## 2. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை

அப்போஸ்தலர் 4:12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை... அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை.

யோவான் 3:17 உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

ஏசாயா 43:11 நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை

தானியேல் 3:29 நேபுகாத்நேச்சாரின் அறிக்கை: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனைப்போல்... இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்.

## 3. அவராலேயன்றி பிதாவினிடத்தில் போக இயலாது

யோவான் 14:1-6 தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

## 4. அவராலேயன்றி ஒன்றும் செய்யக்கூடாது

யோவான் 15:5 நானே திராட்சைச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக்கொடுப்பான்; என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

# 45. கர்த்தருடைய வார்த்தைகள் ஒழிவதில்லை

## 1. வார்த்தைகள் ஒழிவதில்லை

மத்தேயு 5:18 வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது...

மத்தேயு 24:35, மாற்கு 13:31, லூக்கா 21:33 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.

எரேமியா 18:18 ஆசாரியரிடத்திலே வேதமும், ஞானிகளிடத்திலே ஆலோசனையும், தீர்க்கதரிசிகளிடத்திலே வசனமும் ஒழிந்து போவதில்லை.

## 2. வார்த்தைகள் தவறிபோகவில்லை

யோசுவா 23:14,1 இராஜாக்கள் 8:56 உங்கள் தேவனாகிய கர்த்தர் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறி போகவில்லை.

## 3. வார்த்தைகள் விழவில்லை

1சாமுவேல் 3:19, 2இராஜாக்கள் 10:10 அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்து போகவிடவில்லை.

## 4. வார்த்தைகள் நீங்குவதில்லை

ஏசாயா 59:21 நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகள், உன் வாயி- ருந்தும்... நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லு...

## 5. வார்த்தைகள் திரும்புவதில்லை

ஏசாயா 55:11 என் வாயி- ருந்து புறப்படும் வசனம் வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.

## 6. வார்த்தைகள் குறைவதில்லை

எரேமியா 26:2 உனக்குக் கற்பித்த எல்லா வார்த்தைகளையும் அவர்களுக்குச் சொல்லு; ஒரு வார்த்தையும் குறைத்து...

## 7. வார்த்தைகள் தாமதிப்பதில்லை

எசேக்கியேல் 12:28 என் வார்த்தைகளில் ஒன்றாகிலும் இனி தாமதிப்பதில்லையென்று கர்த்தர் உரைக்கிறார்.

# 46. கர்த்தருடைய கரங்கள் குறுகுவதில்லை

## 1. கர்த்தருடைய கரங்கள் மீட்கிறது

ஏசாயா 59:1 இரட்சிக்கக்கூடாதபடிக்கு கை குறுகிபோவதில்லை
சங்கீதம் 138:7 உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்
ஏசாயா 50:2 மீட்கக்கூடாதபடிக்கு என் கரம் குறுகிற்றோ?

## 2. கர்த்தருடைய கரங்கள் கொடுக்கிறது

எண்ணாகமம் 11:23 இறைச்சிக்காக மக்கள் மோசேயிடம் முறையிட்டபோது, கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? இப்பொழுது காண்பாய் என்று சொல்- காடைகளை தந்து போஷிக்கிறார். .

## 3. கர்த்தருடைய கரங்கள் ஆசீர்வதிக்கிறது

மாற்கு 10:16 சிறுபிள்ளைகளை அணைத்துக்கொண்டு அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

லூக்கா 24:50 சீடர்களை பெத்தானியா வரைக்கும் அவர் அழைத்துக் கொண்டுபோய், கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

## 4. கர்த்தருடைய கரங்கள் சுகமளிக்கிறது

மத்தேயு 8:3, மாற்கு 1:41 குஷ்டரோகியை சுகமாக்கினார்.

மத்தேயு 8:15 கையைத் தொட்டவுடனே பேதுருவின் மாமி ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று.

மாற்கு 5:23, மத்தேயு 9:25 யவீரு மகள் மரண அவஸ்தையாயிருக்கும்போது கைளைப் பிடித்து எழுப்புகிறார்.

மாற்கு 8:25 பெத்சாயிதா குருடன் கண்களின்மேல் கைகளை வைத்து அவனைப் பார்க்கும்படி செய்தார்.

மாற்கு 9:17-27ஊமையான ஒரு ஆவிபிடித்த அசுத்த ஆவியுடையவனை கையால் தூக்கினார்.

லூக்கா 4:40 பற்பல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை தம்முடைய கைகளை வைத்து சுகமாக்கினார்.

லூக்கா 13:13-18 வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட நிமிரக்கூடாத கூனியை சுகமாக்கினார்.

## 5. கர்த்தருடைய கரங்கள் தாங்குகிறது

சங்கீதம் 18:35, 63:8, ஏசாயா 41:10 உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது.

# 47. கர்த்தருடைய செவிகள் மந்தமாவதில்லை

ஏசாயா 59:1 கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய (கர்த்தருடைய) செவி மந்தமாவதில்லை

## 1. கர்த்தருடைய செவிகள் கேட்கிறது

ஆதியாகமம் 21:17 தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்.
2சாமுவேல் 22:7, சங்கீதம் 18:6 ஆலயத்தி- ருந்து என் சத்தத் தைக் கேட்டார்; என் கூப்பிடுதல் அவர் செவிகளில் ஏறிற்று.
1 இராஜாக்கள் 17:22 கர்த்தர் எ- யாவின் சத்தத்தைக் கேட்டார்.
சங்கீதம் 4:3 கூப்பிடுகையில் அவர் கேட்பார்.
சங்கீதம் 6:8 கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்.
சங்கீதம் 6:9,28:6 கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்.
சங்கீதம் 40:1 கர்த்தர் என் கூப்பிடுதலைக் கேட்டார்.
சங்கீதம் 55:17 அவர் என் சத்தத்தைக் கேட்பார்.
சங்கீதம் 66:19 என்ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்.
யோவான் 9:31 சித்தமானதை செய்தால் செவிகொடுப்பார்.

## 2. கர்த்தருடைய செவிகள் கவனிக்கிறது

2 நாளாகமம் 6:40, 7:15, உம்முடைய செவிகள் கவனிக்கிறது.
நெகேமியா 1:11 ஜெபத்தை கவனிக்கிறது.
மல்கியா 3:16 கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்.
சங்கீதம் 130:2 என் விண்ணப்பத்தைக் கவனித்திருப்பதாக
1 பேதுரு 3:12 அவர்கள் வேண்டுதலுக்கு கவனமாயிருக்கிறது.

## 3. கர்த்தருடைய செவிகள் திறந்திருக்கிறது

சங்கீதம் 34:15 அவர்கள் கூப்பிடுதலுக்கு திறந்திருக்கிறது.
சங்கீதம் 120:1 நெருக்கத்திலே அவர் செவிகொடுத்தார்.
யோவான் 10:3,4 ஆடுகள் மேய்ப்பனுடைய சத்தத்துக்கு செவிக்கொடுக்கிறது.
ஆதியாகமம் 30:17 லேயாள் ஆதியாகமம் 30:22 ராகேல் நியாயாதிபதிகள் 13:9 மனோவா 2இராஜாக்கள் 13:4 யோவாகாஸ் சங்கீதம் 66:19, சங்கீதம் 77:1 ஆசாப்

# 48. கர்த்தருடைய கண்கள் உறங்குவதில்லை

சங்கீதம் 121:4 இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை

ஆதியாகமம் 16:13 (ஆகார்) கர்த்தருக்குக் காண்கிற தேவன்...

யோபு 7:8 உம்முடைய கண்கள் என்மேல் நோக்கமாயிருக்கிறது.

யோபு 34:21 உம்முடைய கண்கள் மனுஷனுடைய வழிகளை...

சங்கீதம் 34:15, 1பேதுரு 3:12 நீதிமான்களின்மேல் நோக்கமாயி...

சங்கீதம் 139:16 என் கருவை உம்முடைய கண்கள் கண்டது.

நீதிமொழிகள் 15:3 கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்தும் நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது

எரேமியா 5:3 உம்முடைய கண்கள் சத்தியத்தை நோக்குகின்றது.

## 1. தேசத்தின் மீது கண்கள்

உபாகமம் 11:12 வருஷத்தின் துவக்கமுதல் முடிவுமட்டும் எப்பொழுதும் கர்த்தருடைய கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்.

## 2. ஆலயத்தின் மீது கண்கள்

2நாளாகமம் 6:20,7:15 இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு என் கண்கள் திறந்திருக்கும்.

சங்கீதம் 11:4 கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் இருக்கிறார். அவருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது.

நெகேமியா 1:6ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய கண்கள்...

## 3. பூமியின் மீது கண்கள்

2நாளாகமம் 16:9 தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமை விளங்கப்பண்ணும்படி...

சங்கீதம் 14:3; 33:13,14; 53:2; 102:20 தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்கும்படி பரலோகத்தி-ருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

## நம்முடைய கண்கள்

சங்கீதம் 121:1, எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராய் என் கண்களை ஏறெடுக்கிறேன்.

சங்கீதம் 123:1,2 வேலைக்காரரின் கண்கள் எஜமான்களின் கையை... நோக்கியிருக்குமாப்போல் எங்கள் கண்கள் அவரை...

# 49. சுபாவம் மாற்றும் பாவம்

## 1. பாவம் எது?

நீதிமொழிகள் 24:9 தீய நோக்கம் பாவமாம்.
1யோவான் 3:4 நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்
1யோவான் 5:17 அநீதியெல்லாம் பாவம்
யாக்கோபு 4:17 நன்மைச் செய்யாமற்போனால் பாவம்
உபாகமம் 23:21 பொருத்தனை நிறைவேற்றாம- ருந்தால் பாவம்
உபாகமம் 24:15 வேலைக்குக் கூ- கொடுக்காவிட்டால் பாவம்
1இராஜாக்கள் 8:46 பாவம் செய்யாத மனுஷன் இல்லை
நீதிமொழிகள் 14:21 பிறனை அவமதிக்கிறவன் பாவம் செய்கிற...
நீதிமொழிகள் 10:19 சொற்களின் மிகுதி பாவமில்லாமற்போகாது

## 2. பாவம் எங்கே?

ஏசாயா 38:17 பாவங்களை முதுகுக்கு பின்னால் எறிகிறார்
மீகா 7:19 பாவங்களை சமுத்திரத்தின் ஆழத்தில் போடுகிறார்
சங்கீதம் 103:12 பாவங்களை தூரத்தில் விலக்குகிறார்

## 3. பாவத்தின் முடிவு?

ஆதியாகமம் 4:7 பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்.
ஏசாயா 59:2 பாவங்கள் தேவனைவிட்டுப் பிரிக்கிறது
எரேமியா 5:25 பாவங்கள் நன்மையை வரவொட்டாதிருக்கிறது.
ரோமர் 6:23 பாவத்தின் சம்பளம் மரணம்
எசேக்கியேல் 18:20 பாவம் செய்கிற ஆத்துமா சாகும்
நீதிமொழிகள் 28:13 பாவத்தை மறைக்கிறவன் வாழ்வதில்லை

## 4. பாவத்தின் விடிவு?

1 தீமோத்தேயு 1:15 பாவிகளை இரட்சிக்க இயேசு வந்தார்
1 யோவான் 1:7 இயேசுவின் இரத்தம் பாவத்தை சுத்திகரிக்கும்
நீதிமொழிகள் 10:12; 1 பேதுரு 4:8 அன்பு பாவங்களை மூடும்
சங்கீதம் 32:1 எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்
நீதிமொழிகள் 16:6 கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவர்த்தியாகும்.

# 50. சித்தம் இருந்தால் சுத்தம்

## 1. நோயி ருந்து சுத்தம்

மத்தேயு 8:1-3, மாற்கு 1:39-44, லூக்கா 5:12,13 குஷ்டரோகி ஒருவன் இயேசுவிடம் வந்து, உமக்கு சித்தமானால் என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத்தொட்டு, எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி, அவன் சுத்தமானான்.

2இராஜாக்கள் 5:10-14 நாகமான் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்.

## 2. பாவத்தி ருந்து சுத்தம்

சங்கீதம் 51:1,2,7 பாவத்தினால் கறைபட்டுப்போன தாவீது என் மீறுதல் நீங்க என்னைச் சுத்திகரியும், என் பாவமற சுத்திகரியும். என்னை ஈசோப்பினால் சுத்திகரியும். என்று வேண்டுகிறான்.

1யோவான் 1:7,9 இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங் களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

## 3. அசுத்தத்தி ருந்து சுத்தம்

எசேக்கியேல் 36:25 நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். உங்களுடைய எல்லா விக்கிரகங்களையும் நீக்கி சுத்தமாக்குவேன் நீங்கள் சுத்தமாவீர்கள்.

1தெசலோனிக்கேயர் 4:7 தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

### இதர வசனங்கள்

மத்தேயு 5:8 இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

1பேதுரு 1:22 உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்.

அப்போஸ்தலர் 10:15, 11:9 தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே.

# 51. முன்னுமில்லை இதற்கு பின்னுமில்லை

1சாமுவேல் 2:2 கர்த்தரைப்போல பரிசுத்தமுள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை

2சாமுவேல் 7:22; 1இராஜாக்கள் 8:23; 1நாளாகமம் 17:20; ஏசாயா 43:10,11; 44:6; 45:5,18,21; எரேமியா 10:6; ஓசியா 13:4; யோவேல் 2:27

## 1. யோசுவாவைப் போல

யோசுவா 10:14 கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை.

## 2. சாலொமோனைப் போல

1இராஜாக்கள் 3:12 ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்கு முன் இருந்ததுமில்லை உனக்கு பின் எழும்புவதுமில்லை.

## 3. எசேக்கியாவைப் போல

2இராஜாக்கள் 18:5 கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்குப் முன்னும் இருந்த ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததுமில்லை.

## 4. யோசியாவைப் போல

2இராஜாக்கள் 23:25 நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றபடியெல்லாம் செய்ய மனதைச் சாய்த்தான். அவனைப்போலொத்த ராஜா முன் இருந்ததுமில்லை அவனுக்குப்பின் எழும்பினதுமில்லை.

## 5. மோசேயைப் போல

உபாகமம் 34:10-12 கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப் போல ஒரு தீர்க்கத்தரிசியும் ...அப்புறம் எழும்பினதில்லை.

## 6. யோபுவைப் போல

யோபு 1:8 உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல, பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.

## 7. யோசேப்பைப் போல

ஆதியாகமம் 41:38,39 தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷ னைப் போல வேறொருவன் உண்டோ என்றான். உன்னைப்போல விவேகமும் ஞானமுள்ளவன் வேறொருவனும் இல்லை.

# 52. முடிவு தரும் விடிவு

நீதிமொழிகள் 23:18 நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது

பிரசங்கி 7:8 ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது

## 1. வியாதிக்கு முடிவு

2இராஜாக்கள் 20:1-5 எசேக்கியா இராஜாவின் வியாதிக்கு முடிவு தந்து, மீண்டும் 15 வருடம் ஆயுள் கூட்டி விடிவு தருகிறார்.

லூக்கா 8:43-48 12 வருடமாய் பெரும்பாடுள்ள ஸ்திரிக்கு இயேசுவைத் தொட்டவுடன் வியாதிக்கு முடிவு வருகிறது.

யோவான் 5:5(1-9) 38 வருடமாய் வியாதியோடு இருந்த மனிதனை இயேசு சந்தித்தவுடன் வியாதிக்கு முடிவு வருகிறது.

## 2. துக்கத்துக்கு முடிவு

ஏசாயா 60:20 கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார். உன் துக்கநாட்கள் முடிந்துபோம்.

## 3. சோதனைக்கு முடிவு

யோபு 8:7 உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்.

யோபு 42:12 கர்த்தர் முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்.

## 4. தனிமைக்கு முடிவு

ரூத் 2:12,13; 4:10,13 கணவனை இழந்து இளம்வயதிலே கைம்பெண்ணான ரூத்தின் தனிமைக்கு போவாஸ் மூலம் விடிவு பிறக்கிறது.

ஆதியாகமம் 18:10; 21:1-3 ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் குழந்தை பிறக்காது என முடிவு வந்த பிறகு கர்த்தர் ஒரு குழந்தைக் கொடுத்து சந்ததியைப் பெருகப்பண்ணினார்.

## 5. அடிமைக்கு முடிவு

ஆதியாகமம் 37:2; 37:28; 41:38-44 யோசேப்பை அடிமையாய் விற்கப்பட்ட பிறகு, கர்த்தர் விவேகமும், ஞானமும் தந்து, எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினார்.

# தன்னிகரற்ற பரிசுத்த வேதாகமம்

ஆதி முதற்கொண்டு ஆதரையில் வாழும்
ஆதாரம் நீயே-வேதாகமே
ஆதரவும் நீயே
ஆகாயம் போல் உயர்ந்து ஆதவனாய் திகழும்
ஆதாயம் நீயே-வேதாகமே
ஆகாரமும் நீயே

சாதிக்க உதித்திட்ட காவியமும் நீயே
போதிக்க பதித்திட்ட ஓவியமும் நீயே
பேதையை மேதையாக்கி சாதனையாய் நிறுத்தும்
போதகமும் நீயே-வேதாகமே
சாதகமும் நீயே

உணர்விலே ஊடுருவும் மூச்சும் நீயே
உயிரிலே உறவாடும் பேச்சும் நீயே
உள்ளத்தைத் திறந்து உள்ளதைக் காட்டும்
உண்மையும் நீயே-வேதாகமே
நன்மையும் நீயே

வருந்துபவருக்கு வழிகாட்டும் விழியும் நீயே
திருந்துபவருக்கு விழிப்பூட்டும் மொழியும் நீயே
பாமரனை பாவலனாக்கி பாரினில் உயர்த்தும்
சத்தியமும் நீயே-வேதாகமே
நித்தியமும் நீயே

---

இந்த அருட்செய்தியைப் பயன்படுத்திய அனைவருக்கும் என் இருதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றிகூறுகிறேன் விரைவில் உங்களுடைய கரங்களில் அருட்செய்தி 4-ஆம் பாகம் தவழ ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் நம்மோடிருப்பாராக ஆமென்.

## ஆசிரியரைக் குறித்து...



''சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்'' (ஏசாயா 60:22)

திருமிகு. முனிசாமி (அருள்துரை) **திருமதி.சுகுணாமேரி** இவர்களின் இரண்டாவது மகனாக 31-07-1979 ஆண்டு வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், காவேரிப்பாக்கம் அருகிலுள்ள கடப்பேரி கிராமத்தில் பிறந்தார். சிறுபிராய முதற்கொண்டு கிறிஸ்துவை புகழ்ந்து பாடுவதே இவருடைய மகிழ்ச்சியாக இருந்தது. எனவே கடவுளின் உன்னத பணிக்கென அழைப்புப்பெற்று 1997 ஆம் ஆண்டு **ECC, ECI** ஊழியத்தில் இணைந்தார். **ECI மும்பை** மற்றும் **சென்னையில்** இறையியல் பயின்றார். அதைத் தொடர்ந்து **தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா, அந்தமான் நிக்கோபர்தீவுகள்** என பல மாநிலங்களில் ஊழியம் செய்தார். தற்போது தமிழ்நாட்டில் உள்ள காவேரிப்பாக்கம் ஏரியாவில் ஊழியம் செய்து வருகிறார்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் விசேஷ வரம்பெற்று 1000-க்கும் அதிகமான தமிழ் கிறிஸ்துவ பாடல்களும், 20-க்கும் அதிகமான இந்தி பாடல்களும், 1000-க்கும் அதிகமான பிரசங்கக் குறிப்புகளும், 2000-க்கும் அதிகமான தமிழ் கவிதைகளும், 200-க்கும் அதிகமான ஆங்கில கவிதைகளும், 100-க்கும் அதிகமான இந்தி கவிதைகளும், நாடகங்கள், கதைகள், கட்டுரைகள் எனவும் பல எழுதியிருக்கிறார். மேலும் 6-புத்தகங்களும், ஒரு பாடல் ஒலி பேழையும் **(CD)** வெளியிட்டுள்ளார்.

தற்போது இந்த புத்தகமும் பல வருட தியானத்தின் பலனாக வெளிவந்துள்ளது. இதன் மூலம் வசனங்களை எளிதில் தெரிந்துகொள்ளவும், தங்கள் திருச்சபைகளில் பிரசங்கிக்கவும் மிகவும் உதவியாயிருக்கும். மேலும், இதை மற்ற சபை ஆயர்களுக்கும், ஊழியர்களுக்கும், நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும் அன்பு பரிசாகவும் அளிக்கலாம்.

திருமதி. **பூர்ணிமா அருள்தாஸ்**